சென்றவார நிகழ்ச்சிகள்

★

'அடிமை வாழ்வைவிட அழிவே மேல்'

"ரோமாபுரி தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கையில், நீரோ உல்லாசமாக பிடில் வாசித்துக் கொண்டிருந்தார். அவ்விதமே தங்களால் அணைக்க முடியாத ஒரு தீயைத் தாங்கள் மூட்டிவிட்டு சேவாக்ராமத்தில் உல்லாஸத்துடன் உலாவிக் கொண்டிருக்கப் போகிறீர்களா?" என்று ஒரு நிருபர் கேட்டதற்கு மகாத்மா "ஹரிஜன்" பத்திரிகையில் பின் வருமாறு பதில் கூறியிருக்கிறார்:—

"நான் மூட்டும் தீ மட்டும் அணையாமல் கொழுந்துவிட்டு எரியுமானால் அப்போதுதான் எனக்கும் நீரோவுக்கும் உள்ள வித்தியாசம் தெரியும். அந்தத் தீ ஒரு கட்டுக்கடங்காவிட்டால் நான் உல்லாஸமாக சேவாக் கிராமத்தில் உலவி வராமல் நான் மூட்டிய தீயில் நானே விழுந்து மடிவதைக் காண்பீர்கள். நிருபர் இவ்விதம் கூறியது எனக்கு வருத்தத்தையே தருகிறது. நெடுநாளைய கடனைத் தீர்க்க நான் முயலுவதால் நேரிடக்கூடிய காரியங்களுக்காக என் மீது குற்றஞ் சுமத்துவானேன்? அதோடு நான் உயிருடன் வாழ்வதற்கே முக்கியமான ஒரு நிபந்தனையாக அது அமைந்துவிட்ட இந்த சமயத்தில் அதற்கு ஆக்ஷேபமேன்?

நம்மை ஆளுவோர் பள்ளிக்கூடங்களில் நாம் வாசிக்கும்போதே பிரிட்டானியர் எப்போதும் அடிமைகளாக வாழமாட்டார்கள் எனப் பாடுவதற்கு நமக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள். பிரிட்டிஷார் தங்கள் சுதந்திரத்தைக் காத்துக் கொள்ள இப்போது தண்ணீரைப்போல் ரத்தத்தைச் சிந்தி வருகின்றனர். பணத்தைவெறும் மண்ணைப்போல் வாரி இறைக்கின்றனர். அவ்விதமிருக்கையில் அவர்கள் இந்தியரையும் ஆப்ரிக்கரையும், மட்டும் அடிமைப்படுத்தி வைத்திருப்பது நியாயமா? அடிமை வாழ்விலிருந்து விடுதலை பெற இந்தியர் மட்டும் பிரிட்டிஷாரை விடக் குறைவாக முயலவேண்டுமா? பிணம் போன்ற இந்த அடிமை வாழ்வைவிட சுய அழிவே மேல் என நினைத்து வேதனையினின்று மீட்சி பெற நடவடிக்கைகள் நடத்தும் ஒருவனையா நீரோவுக்கு ஒப்பிட்டுச் சொல்வது? அவ்விதம் ஒப்பிடுவது வார்த்தைகளைத் துஷ்பிரயோகம் செய்வதாகும்."

* * * *

ஸி. ஆர். ராஜிநாமா

தற்போதைய கொள்கையிலிருந்து காங்கிரஸை மாற்ற பூரண சுதந்திரத்துடன் தமது பிரசாரத்தை நடத்துவதற்காக சென்னை காங்கிரஸ் சட்டசபைக் கக்ஷித் தலைவர், ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியார் காங்கிரஸ் மெம்பர் பதவியையும், கக்ஷிக் கூட்டத்தில் அஸெம்பிளி மெம்பர் பதவியையும் ராஜிநாமாச் செய்ய முடிவு செய்துவிட்டார்.

"1. காங்கிரஸ்-லீக் சமரஸம்;

2. இந்தியா பூராவுக்கும் ஒரு தேசீய சர்க்காரையும். இப்பொழுது மாகாணங்களில் நடந்து வரும் யதேச்சாதிகார ஆக்ஷிக்குப் பதிலாக ஜனநாயக சர்க்கார்களையும் ஏற்படுத்துதல்;

3. அச்சு நாடுகளின் ஆக்கிரமிப்பை எதிர்த்து இந்தியாவைப் பாதுகாப்பதில் அரசாங்கமும் ஜனங்களும் ஒன்றுபட்டு வேலை செய்தல்.

இம் மூன்று பிரச்னைகள் சம்பந்தமாக காங்கிரஸ் அனுபவ சாத்தியமான மனோபாவத்தை அனுஷ்டிக்க வேண்டுமென்பதே எனது கருத்து; இம் மனோபாவத்தை அனுஷ்டிக்கும்படி காங்கிரஸைச் செய்யவேண்டுமென்பதற்காகவே நான் பிரசாரம் செய்துவருகிறேன்."

இதுவே ராஜாஜி. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரின் கடிதத்துக்கு அனுப்பியுள்ள பதிலின் சாரம்.

* * *

காரியக்கமிட்டி தீர்மானம்

சர்க்கார் உத்தரவுபடி கிராமங்களைக் காலிசெய்ய நேர்ந்தாலும், தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ நிலங்களையும் மோட்டார் வாஹனங்களையும் படகுகளையும் இழக்க நேர்ந்தாலும், அதனால் பாதிக்கப்படுபவர்கள் நடந்து கொள்ள வேண்டிய விதத்தைப் பற்றிக் காங்கிரஸ் காரியக் கமிட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. இது சம்பந்தமாகப் பொது ஜனங்களுக்குள்ள குறைகளைச் சர்க்கார் உடனே கவனித்து போக்க வேண்டுமென்றும், சரியான பரிகாரம் கிடைக்காவிட்டால் பொது ஜனங்கள் உத்தரவுக்கு இணங்க மறுத்துப்போராடலாமென்றும் ஆனால் அதற்குமுன் சமரஸத்துக்கான எல்ல முறைகளையும், கையாண்டு பார்த்துவிட வேண்டுமென்றும் அத்தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

* * * *

ருஷ்ய யுத்தம்

வாரனேஷிலும் டான் நதிக்கு மேற்கேயுள்ள பூரா போர் முனையிலும் நிலைமை மிக நெருக்கடியாயிருக்கிறதென ராய்ட்டர் விசேஷ நிருபர் கூறுகிறார். ஜெர்மனியருக்கு அளவிடமுடியாத நஷ்டமேற்பட்டிருக்கிறது. டான நதியில் ரத்த வெள்ளம் ஓடுகிறது. ஜெர்மன் டாங்கிப் படைகளில் மூன்றில் ஒரு பாகம் சேதப்படுத்தபபட்டுவிட்டது. ஆனால் ஜெர்மனியர் மேற்கிலிருந்து ஏராளமான துருப்புகளை இன்னும் கொண்டு வந்து சேர்த்துக்கொண்டிருக்கின்றனர். இம் முனையிலுள்ள ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் மற்றொரு தாக்குதலுக்குத் தயாராகத் தங்களுடைய படைகளை அவசரமாகத் திருத்தியமைக்கின்றனர்.

வடக்கே கலினின் முனையில் 9 நாள் யுத்தம் சற்றும் வேகத்தில் குறைவதாகத் தெரியவில்லை. முக்கியமான ரஸதாவைப் பிடிப்பதற்காக நடக்கும் போர் இன்னும் நடந்து வருகிறது. 4, 5 நாட்களில இரு பகுதிகளில் மட்டும் ஜெர்மனியர் 100 டாங்கிகளை இழந்தனர்; ஆயிரக்கணக்கான ஜெர்மனியர் தொல்லப்பட்டனர்.

* * * *

நெருக்கடியான நிலைமை

இரண்டு வாரங்களுக்கு முன் காக்கஸில் ஆரம்பித்த ஜெர்மன் தாக்குதலும், அதன் பிறகு டீலகராடிலும் வால்சன்ஸ்கிலும் இத் தாக்குதலுக்கு ஆதரவாகத் துவக்கப்பட்ட போர்களும் இப்பொழுது 200 மைல் விஸ்திரணமுள்ள போர் முனையாக விருக்கின்றன. ராஸோஷைப் பிடித்து விட்டு இப்பொழுது ஜெர்மனியர் நகருக்கு தெற்கே இரண்டு இடங்களில் முன்னேறி வருகின்றனர். ஜெர்மனியருக்கு ஆள் சேதமும் தளவாடச் சேதமும் வெகுவாக ஏற்பட்டு அவர்கள் போட்ட திட்டப்படி முன்னேற முடியாதவர்களாயிருக்கிறார்கள்.

நிலைமை மிகவும் நெருக்கடியானதாக இருக்கிறதென மாஸ்கோவில் பகிரங்கமாக உணரப்படுகிறது இவ்வுணர்ச்சியானது இதற்கு முன் செய்ததைவிட இன்னும் அதிகமான த்யாகத்தைச் செய்யும்படி தேசத்தைத தூண்டிவிட்டிருக்கிறது.

* * * *

ஸ்பெயினில் மீண்டும் முடியரசு?

கூடிய சீக்கிரத்தில் திரும்பவும் ஸ்பெயினில் முடியரசு ஏற்படுமென்று பர்லினிலுள்ள ராஜீய வாதிகள் கோஷ்டியில் கூறபபடுகிறது. என பேஸர் நாகரிட்சன் பத்திரிகை தெரிவிக்கிறது. ஸ்பானிய அந்நிய நாட்டு மந்திரியான ஸினர் ஸனர் ரோமுக்குப் போயியிருந்தாரென்றும இது சம்பந்தமான ஏற்பாடுகளில் பாப்பாண்டவரின் தலையீட்டைக் கோருவதற்காகவே அவர் சென்றதாயும் கூறப்படுகிறது.

காலஞ்சென்ற அல்பான்ஸோ அரசரின 3-வது குமாரன் டான்ஜுவான் ஸ்பெயினுக்கு புதிய மன்னராக வருவாரென்று பர்லின் செய்தி கூறுகிறது. முடியரசு ஏற்படுமானால் டான்ஜுவானுக்கு முடி சூட்ட வேண்டுமென அல்பான்ஸோ நியமனம் செய்திருந்தார்.

* * *

போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜனரலாயிருந்த ஸர் அலக்ஸாண்டர் ஹாப்பல் பதவியை விட்டு விலகு முன் ஆபீஸ் சிப்பந்திகள் அவருக்குப் பிரிவு உபசாரம் நடத்தி வைத்த போது எடுத்த படம்.

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 3 15-2-'42 Price 2 Annas.

சீவக சிந்தாமணி 4.

ஆசிரியன் கூறிய கதை

★

——வ. வேணுகோபாலன் எழுதியது——

இராசமாபுரத்தே கந்துக்கடன் இல்லத்தில் விசயையின் சிறுவன் வளர்பிறை போல் வளர்ந்து வந்தான். அக்காலத்து சுநந்தைக்கு ஒரு மகன் பிறந்து உயிருடன் வளர்ந்து வந்தான். அவனுக்கு நந்தட்டன் என்று பெயரிட்டனர். தனக்கு மகன் பிறந்து உயிரோடிருந்தும், சுநந்தைக்கு விசயையின் மகனிடத்தே சிறிதும் அன்பு குறையவில்லை. விசயையின் சிறுவன் கந்துக் கடன் இல்லத்தில் வளர்வதை அறிந்த சச்சந்தனுடைய தாமுக்கிழத்தியர், கட்டியங்காரனுடைய கொடுமைக்குப் பயந்து தம் பிள்ளைகளையும் வளர்க்கும்படி, கந்துக்கடனிடம் வேண்டிக்கொண்டு ஒருவருமறியாத வண்ணம், கந்துக்கடனிடம் பிள்ளைகளை ஒப்புவித்தனர். அப்பிள்ளைகளில் நபுலன் விபுலன் என்பவர்கள் விசயையின் மகனுக்கு உற்ற நண்பர்களாயிருந்து வளர்ந்து வந்தனர்.

கந்துக்கடன். விசயையின் சிறுவனுக்குப் பெயரிட எண்ணி ஒரு நல்ல நாளில், சான்றோர் பலரையும் உறவினரையும் வருவித்தான். எல்லோரும் சேர்ந்து சிறுவனைச்; "சீவ, சீவ, சீவ" என்று வாழ்த்தி சீவகன் என்று பெயரிட்டார்கள். திருமால் நந்தகோன் மனையில் மறைய வளர்ந்தாற் போல சீவகன் கந்துக்கடன் மனையில் மறைய வளர்ந்து வந்தான். நந்தட்டன முதல் எல்லாச் சிறுவரும், சீவகனைத் தம் தலைமையனாக எண்ணி ஒழுகி வந்தனர்.

சீவகன், அரச குலத்திற் பிறந்தமைக்கேற்ப அறிவும், பொலிவும் பெற்று கல்வி பயிலும் பருவத்தைப் பெற்றான். அதை அறிந்த கந்துக்கடனும் சுநந்தையும், சீவகனையும், நந்தட்டன் முதலியவர்களையும், தமக்குப் பழக்கமுள்ள குருவான அச்சணந்தியாசிரியர் என்பவரிடம் கல்வி கற்க அனுப்பி வைத்தனர்.

சீவகனைச் சிறு வயதிலேயே அச்சணந்தியாசிரியர் பார்த்துப் பழகியுள்ளாராதலின் அவன் தம்மிடம் கல்வி பயில வந்தது பற்றி மிக்க உவகைகொண்டார். சீவகன் முதலிய எல்லோரும் ஆசிரியரிடம் கற்க வேண்டிய நூல்களைத் திருத்தமுறக் கற்றனர், அப்போது அச்சணந்தியாசிரியரிடம் கல்விபயின்றவர்களான, பதுமுகன், புத்திசேனன், தேவதத்தன், ஸ்ரீதத்தன் என்ற சிறுவர்கள் சீவகனுடைய உயிர்த் தோழர்களாய் உடனிருந்து வந்தனர். ஆசிரியர் இசைக்கலை, சோதிடக்கலை முதலியவற்றையும் கற்பித்தார். சீவகன், இசைக்கலையில் மிக்க தேர்ச்சி பெற்று, வீணை வாசித்தலிலும் வல்லவனானான். பின்பு, தனுர் வேதத்தை எல்லோருக்கும் திறம்படக் கற்பித்தார் ஆசிரியர், பிறகு அரசன் அறியாவண்ணம், தனியிட மழைத்துச் சென்று சீவகன் முதலிய எல்லோருக்கும், யானையேற்றம், குதிரையேற்றம் முதலியவற்றையும் பயில்வித்தார். எல்லாங் கற்பித்த பின்பு, ஞான நூலையும் கற்பித்து, மாணவர்களை அமைதியுடன் இருக்கச் செய்தார். ஆசிரியரின் திறமையைக் கண்ட கந்துக் கடன், அதிசயமும், உவகையும் கொண்டு அவரைப் பாராட்டினான். சீவகனுடைய தேக வன்மையையும், கலைத்தேர்ச்சியாலுண்டான முகத் தோற்றத்தையும் கண்டு யாவரும் அதிசயித்தனர்.

ஒரு நாள் ஆசிரியர் சீவகனைத் தனியே அழைத்துச் சென்று, ஓர் அசோக மரத்தடியில் அமர்ந்து, சீவகனை அருகே அமர்த்தி, அரசனுடைய ஒற்றுருட்களும், மனித பாஷையைப் பழகும், கிளி பூவை முதலியனவும் இல்லாதபடியை ஆராய்ந்து சீவகனை நோக்கிக் கூறலானார்.

"சீவக! நான் கூறும் ஒரு கதையைக் கேள்!" என்றார்.

"ஆசார்ய! அவ்விதமே ஆவலுடன் கேட்கிறேன்" என்று சீவகன் விடையளித்தான்.

"சீவக! இவ்வுலகத்துக்கு மன்னன், சச்சந்தனென்பான்; அவன் மனைவி, விசயை என்பாள். அரசனை மந்திரி கொல்ல முயற்சித்தான்; அரசன் மனைவியை வெளியிற் போக்கித் தான் மந்திரியோடு போர் செய்து மாண்டான். அவன் மனைவி, வருந்தி சுடுகாட்டிலே ஒரு புதல்வனைப் பெற்றாள்; அப்புதல்வனினின்றும் அவளை, ஒரு தெய்வம் வேறாகப் பிரித்து வைத்தது. அப்போது ஒரு வணிகன், தனக்கு ஒரு முனிவன் கூறிய மொழியை நம்பி, சுடுகாடு வந்து, அப்புதல்வனை எடுத்துச் சென்றான். அவ்வணிகனும் அவன் மனைவியும் அப்புதல்வனைப் பல புதல்வரோடு வளர்த்தனர்; பின்பு அப்புதல்வனை என்னிடம் கல்வி பயில அனுப்பினர். அவன் எல்லாக் கலையும் கற்று மேம்பட்டு விளங்குகிறான்" என்று கூறி ஒரு கதை போலக் கண்ணன் கர்ணனுக்குப் பிறப்புணர்த்தியது போலச் சொல்லவே,

"ஆசார்ய! அத்தகைய கலை வல்லோன் யார்?" என்று ஆவலுடன் கேட்டான் சீவகன்.

"சீவக! நீ தான் அவன்" என்று புன்முறுவலுடன் ஆசிரியர் கூறினார்.

அதைக் கேட்டதும், "ஆ" என்று கூறிய வண்ணம், சீவகன் பூமியில் விழுந்து மூர்ச்சையடைந்தான்.

உடனே ஆசிரியன் சீவகனை அன்போடு எடுத்துத் தழுவி மூர்ச்சை தெளிவித்து. "ஐயா! நீ இவ்விதமானது எம் போல்வார் செய்த பாவத்தால் தான்: உன் பகைவன் உயிரோடு நிலைபெற்றுள்ளான்: ஆதலால் மடந்தையரைப் போல் மனம் கலங்காதே" என்று ஆறுதல் கூறினார்.

மனம் தெளிந்த சீவகன், கண் சிவந்து, எழுந்து நின்று வில்லைக் கையிலேந்தி, "எந்தையைக் கொன்ற பாதகனை யான் கொன்று வருகிறேன்" என்று புறப்பட்டான்.

உடனே ஆசிரியன் விரைய ஓடி அவனைத் தடுத்து, "ராஜகுமர! யான் ஒன்று வேண்டுவேன்; அதை மறுக்காமல் தர வேண்டும்" என்றார்.

"ஆசார்ய! வேண்டுவதை மறுப்பவன் யானோ!" என்று சீவகன் கூறினன்.

"யான் வேண்டுவது, கட்டியங்காரனை இன்னும் ஒரு வருஷம் முடியும் வரையில் கொல்ல வேண்டா என்பதே" என்றார் ஆசிரியர்.

"அங்ஙனமே செய்வேன்" என்று கூறிக் கட்டியங்காரன் மீது கொண்ட சீற்றத்தைச் சீவகன் அடக்கினான்.

ஆசிரியர் மீண்டும் சீவகனைப் பார்த்து, "குமர! இக் கதையையும் கேள்" என்றார்.

"ஆசார்ய! தாங்கள் கூறும் அமுதன்ன மொழியைப் பருகுகிறேன்" என்று சீவகன் விடை தந்தான்.

"சீவக! வெள்ளிமலையிலுள்ள வாரணவாசி என்னும் நகருக்கு உலோகபாலன் என்பான் மன்னன். அவன் தன் மகனுக்கு முடிசூட்டித் தவம் செய்யச் சென்றான். தவம் புரிகையில் அவனை, யானைத்தீ யென்னும் பசிநோய் பற்றிக்கொண்டது. அதனால் அவன், இந்நாட்டிற்கு வந்து சேர்ந்தான்" என்று கூறியதும், "ஆசார்ய! அப்பெரியோன் யார்?" என்று ஆவலோடு கேட்டான் கதைமுடிவதன் முன் சீவகன். அவன் கேட்டமைக்கு மனமகிழ்ந்த ஆசிரியர், "ராஜகுமர! உன் குருவாகிய நான் தான்" என்றார் ஆசிரியர்.

"ஆசார்ய! கதையை மேலும் கூறவேண்டும்" என்று சீவகன் உவகையோடு கேட்டான்.

"குமர! இதைக் கேள்; பின்பு கந்துக்கடனுடைய வீட்டிலே சென்று விருந்து உண்டேன். சுநந்தை என் வயிறு வெடிக்க நெய் கலந்த அன்னத்தைப் போட்டாள். அதனால். மனமகிழ்ந்த யான், உண்ட பின்பு, மனையினுள்ளே செல்கையில் பல மகளிர் சூழ, நீ வீற்றிருக்கக் கண்டேன். உடனே என்னைப் பற்றியிருந்த யானைத் தீ என்னும் பசி நோய் அகன்றது. யான் ஆச்சரியமுற்று உன்னைத் தெய்வமோ என்று ஐயங்கொண்டு, ஞானத்தால் ஆராய்ந்தேன். அவ்வாராய்ச்சியின் பயனாலும், உன் தோற்றத்தாலும் பிறப்பை அறிந்தேன்; உடனே, கந்துக்கடனும் மொழிந்தான்; அதை உனக்கு உணர்த்தினேன்" என்று ஆசிரியர் கூறினார்.

அதைக்கேட்ட சீவகன் வியப்பும் மகிழ்வும் கொண்டு. "ஆசார்ய! முயற்சியாலுண்டாகிய தவமே தாயாக நீ தந்தையாகி என்னைப் படைத்தாய்" என்று பாதத்தை வணங்கி நின்றான்.

"ராஜகுமர! யான் துறத்தற்குச் செல்கிறேன்; என் காரியம் நிறைவேறும; என்னைத் தடுக்காதே" என்று கூறி ஆசிரியர் எழுந்தார். "ஆசார்ய, நும் பிரிவு என்னைப்பெரிதும் வருத்துமாயினும், துறவுக்குச் செல்வதைத் தடை செய்யேன்" என்று கூறிக் கண்ணீர் விட்டான் சீவகன்.

ஆசிரியர் சீவகனை அணைத்துத் தேற்றிப் பகையை வெல்லும் உபாயத்தைக் கூறி இல்லத்திற்குச் சென்று கந்துக்கடனிடமும், சுநந்தையிடமும். மற்றச் சிறுவர்களிடமும் தாம் துறவு பூண்டு தவம் செய்யச் செல்வதைக் கூறினார். கந்துக்கடன் மனம் வருந்தி மறுமொழி கூற அஞ்சியிருந்தான்.

சுநந்தை ஆசிரியன் பிரிவுக்கு மனம் பொறாது, "மாதவத்தோய்; நீயும் சீவகனைப் பிரிய மனம் கொண்டனையோ? இது தகாது; நும் பிரிவு எம்மைப் பெரிதும் துன்பப்படுத்தும்" என்று கூறிக் கண்ணீர் விட்டனள்.

ஆசிரியர், சுநந்தைக்கு ஆறுதல் கூறி எல்லோருக்கும் ஆசி கூறித் துறவு பூண்டுத் தவம் செய்தற்குக் காட்டை நோக்கிச் சென்றார்.

(அடுத்தவாரம்: சீவகன் செய்த கன்னிப்போர்.)

1 மணியில் வாலிபம்!

ரமணவிலாசினி வடிகா

காமசக்தியை விருத்தி செய்து, துரிதஸ்கலிதத்தை நிறுத்தி, எல்லோருக்கும் சிற்றின்பத்தில் திருப்தியைத் தரும் பரம ஔஷதம். டப்பி ரூ. 1.

மதன மஞ்சரி பார்மஸி,
184, சைனபஜார் ரோட், மதராஸ்.

கேஸரின் ரிஜிஸ்டர்ட்

அழககாகவும் அடர்த்தியாகவும் புஷ்டியாகவும் கூந்தலை வளர்விக்கும்

விலை 12 அணா

விக்டோரியா டிபோ, மைலாப்பூர், மதராஸ்.

காதல் நாடகம்

சிறு கதை

★

ப. ராம்மூர்த்தி எழுதியது

சங்கருக்கும் சந்திராவுக்கும் எப்படிக் காதல் ஏற்பட்டதோ, அது பகவானுக்குத் தான் வெளிச்சம்! அவன் சரித்திரப்பகுதி மாணவன். இவளோ ஸயன்ஸ் பகுதி. ஆனால் ஒருவர் மேல் ஒருவர் உயிரை வைத்திருந்தது மட்டும் வாஸ்தவம்,

அதேபோல் சங்கரின் தகப்பனார் சந்திரசேகருக்கு எப்படி அந்த சந்திராவின் மேல் வெறுப்பு ஏற்பட்டதோ! அதுவும் மிக்க ஆச்சரியமான விஷயம் தான்!

சந்திரா மிகவும் அழகுடைய பெண்! குணமும் அதற்கேற்றவாறே அமைந்திருந்தது. நல்ல புத்திசாலி. வகுப்பில் நல்ல பெயரெடுத்திருந்தாள். அவளும் முதலியார்வகுப்புப் பெண் தான்.

சங்கர் அவளை விரும்பியது அவனுடைய தகப்பனுருக்குப் பிடிக்கவில்லை. அதற்கு ஒரே ஒரு காரணம் தான் இருக்கலாம். அது தான் பண விஷயம். இவருக்கோ மாதம் நானூறு ரூபாய் சம்பளம் வந்துகொண்டிருந்தது. மாம்பலத்தில் ஒரு பங்களா: விலையுயர்ந்த கார்: சங்கர் அவருடைய ஒரே பிள்ளை: ஆனால் சந்திராவோ!...?

அவள் தகப்பனருக்கு ஹைகோர்ட்டில் க்ளார்க் வேலை. மாதம் நாற்பது ரூபாய் சம்பளம். ஆனால் அவளுடைய அதிர்ஷ்டம் கூடப் பிறந்த பூண்டு ஒன்றுகூட நிற்கவில்லை. எல்லாம் பிறந்து பிறந்து இறந்துவிட்டன. ஏதோ பூர்வீக சொத்து கொஞ்சம் இருந்ததில் அவள் கல்லூரிப் படிப்பைப் பெற முடிந்தது. அவ்வளவு தான்!

இண்டர்மீடியட் முடிந்து 'பி ஏ.' யும் சேர்ந்தார்கள். அவர்களுடைய காதல் நாடகத்தின் முதற்பகுதி முடிந்து முக்கியமான இரண்டாம் பகுதியும் அத்துடன் ஆரம்பமாயிற்று.

சங்கருக்குக் கல்யாணம் செய்ய அவன் தகப்பனர் எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டார் அவனுடைய விருப்பத்துக்கு மாறாக! அவருக்குத்தான் எத்தனை தைரியம்!

கலியாணத்தைத் தடுக்க சங்கரால் முடியவில்லை. அவன் என்ன செய்வான் பாவம்! காதல் பிசாசு அவனை உலுக்கி உலுக்கி ஆட்டிக்கொண்டிருந்தது.

ஒரு நாள் மாலை மணி ஆறு இருக்கும். சங்கர் தன் கல்லூரிக்கெதிரே பீச் சுமணலில் உட்கார்ந்த வண்ணம் யோசனை செய்து கொண்டிருந்தான்.

அவனுடைய கலக்கத்துக்குக் காரணமான சந்திராவும் அவனை அடைந்து அவன் அருகில் அமர்ந்தாள்.

"என்ன சந்திரா, ஒன்றுமே பிடிக்கவில்லை போ!" என்றான் சங்கர்.

"ஏன்? படிப்பு கஷ்டமாயிருக்கா?" என்றாள் சந்திரா.

"அந்த ஏழவைப்பற்றி இப்பொழுதன்ன கவலை. எனக்குக் கல்யாணமாம் இன்னும் ஒரு வாரத்தில்" என்றான் சங்கர்.

"என்ன சங்கர், சங்கர், என்ன? உனக்கா? கல்யாணமா? என்னிடம் சொல்லவில்லையே நீ?" என்று சந்திரா கேட்கும் போதே அவள் மனம் பதைபதைத்தது.

உடனே சங்கர் தன் கல்யாண விஷயம் பூராவும் அவளிடம் சொன்னான்,

சந்திரா பிரமித்துக் கற்பதுமைபோல் சமைந்து உட்கார்ந்துவிட்டாள்.

"இப்பொழுது என்ன செய்யலாம்?" என்றான் சங்கர்.

"என்ன செய்வது? முடியுமானல் நீ இப்பொழுது உன் கல்யாணத்தை நிறுத்தப்பார், இல்லாவிட்டால் இருக்கவே, இருக்கிறது, பொடாஷியம் ஸைனேட்"

"என்னல் நிறுத்த முடியுமானல் இப்பொழுது ஏன் நிச்சயமாகிறது?......ஆனல் தற்கொலை செய்து கொள்வது பாபமல்லவா?"

"என்ன, சங்கர். நாம் இருவரும் பிரிந்து வாழ்வதை விடத் தற்கொலை மேலல்லவா?"

"நாம் ஏன் பிரிந்து வாழ வேண்டும்? எங்காவது......"

"எங்கே போவது கையில் பணமில்லாமல்?"

"பணமா உனக்கென்ன? நான் எடுத்துக் கொண்டு வருகிறேன். அது சரி. அந்த நியூஸ் பேபரைக் கொண்டா. ரயில் வரும் நேரம் பார்க்கலாம்" என்று அவள் கையிலிருந்த பேபரை வாங்கிப் பார்த்தான்,

அவன் அத்ருஷ்டம் அதில் "பம்பாய் பிரகாஷ் சினிடோனில் கதாநாயகி வேஷம் போட அழகும், குரலும் உடைய பெண் தேவை" என்று விளம்பரம் செய்யப்பட்டிருந்தது.

சந்திராவிடம் காண்பித்தான். அவளும் சம்மதித்தாள். மறுநாளே இருவரும் பம்பாய்க்குக் கிளம்பி விட்டனர்.

* * * *

சங்கரின் துரதிர்ஷ்டம் தான் சந்திராவுக்குக் கதாநாயகி வேஷம் பூணத் தருணம் கிடைத்தது.

படப்பிடிப்பு ஆரம்பமாகி இரண்டு மாதம் ஒன்றும குறைவில்லாமல் இருந்தது.

ஆனல் படத்தைச் சீக்கிரம் முடிக்க வேண்டுமென்றதால் இரவெல்லாம் சந்திரா வீட்டுக்குத் திரும்ப முடியாமல் ஸ்டுடியோவிலேயே தங்கும்படி நேரிட்டது.

சுமார் ஆறு மாதங்களாயின. சங்கருக்குச் சந்திரா திருப்தி அளிக்கக் கூடிய வகையில் நடக்கவில்லை. 'மோகம் முபது நாள், ஆசை அறுபது நாள் என்றுகிறர்களே அது வாஸ்தவமா?

சந்திராவுடன் கதாநாயகனை நடித்தவன் ஒரு அழகிய வாலிபன். நல்ல குரலுடன் அழகிய கவர்ச்சிகரமான முகச் சாயலும் பெற்றிருந்தான்.

வர வர சந்திராவின் மனம் அவன் பால் லயிக்க ஆரம்பித்தது. அது ஒரு பெரிய தவறு என்று அவனுக்குப் புலப்பட்ட போதிலும், அவள் தன் மனதைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

சங்கர் அவனுடன் சந்திரா நெருங்கிப் பழகுவதைக் கவனித்தான். ஆனல் அவள் மீது அவன் வைத்திருந்த பற்றுதலில் அதைத் தப்பாக எடுத்துக் கொள்ளவில்லை. கவனித்தும் அவளை அதைப்பற்றி ஒன்றும் கேட்கவில்லை அவன். பெண்ணின் ஹிருதயம் எப்படி ஒரு நிலையில் நிற்காதென்பது அவனுக்குத் தெரியவில்லை. பேதை வாலிபன்!

* * * *

ஒரு நாள் பிற்பகல் மணி மூன்று சந்திரா படப்பிடிப்புக்காக ஸ்டுடியோவுக்குப் போயிருந்தாள். சங்கரும் ஏதோ காரியமாக வெளியே போய் விட்டுத் திரும்பி வந்தான்.

வீட்டு வாசலில் கார் நின்று கொண்டிருந்தது. மெதுவாக உள்ளே நுழைந்தான். தன் படுக்கையறையின் கதவு சாத்தப்பட்டிருந்தது. மெதுவாக எட்டிப் பார்த்தான் ஒரு துவாரத்தின் வழியாக.

உள்ளே அவன் கண்டகாட்சி அவனுடைய ரத்தத்தைக் கொதிக்கச் செய்தது. அவன் முகம் கோபத்தால் சிவந்தது. மீசை துடித்தது. ஏமாற்றத்தால் மனம் கலவரப்பட்டு மயக்கம வந்தது!

அறையில் சந்திரா அந்தக் கதாநாயகனுடன் காதல் நாடகம் நடித்துக்கொண்டிருந்தாள். அவனுடைய மடி மீதமர்ந்து கொஞ்சிக் கொண்டிருந்தாள்!

சங்கர், கோபம், மயக்கம், ஏமாற்றம் ஆகியவற்றால் அடிமையாக்கப்பட்டு மாடி மேல் போனன்: மயங்கிப்படுத்தான்!

ஒரு மணி நேரம் கழித்துச் சந்திரா மாடிமேல் போனள்.

'நீங்க எப்பொழுது வந்தீர்கள்?" என்றாள் சங்கரை நோக்கி.

சங்கரும் தான் கண்டதைக் காட்டிக்கொள்ளாமல், 'ஏன் இப்போதான் வந்தேன் உனக்கு ஷூட்டிங் ஆய்விட்டதா?' என்றான் கேலிச்சிரிப்புடன்.

பேதைப்பெண் அவன் ஹிருதயத்தைக் கிழியா. பார்க்க முடியும்!

ஏதோ அவள். அவனுடைய கேள்விகளுக்குச் சரியான பதில் அளித்தாள். ஆனல் உண்மை தான் அவனுக்குத் தெரியுமே!

அன்றிரவு மணி பதினொன்று. சங்கர் சந்திராவின் அருகில் படுத்திருந்தான். எழுந்து ஓசைப்படாமல் அவளுடைய முகத்தை நோக்கினன் ஒரு கணம்.

சந்திர ஒளியில் சந்திராவின் முகம் மிகவும் களையுடன் விளங்கிற்று.

மங்கிய ஒளியிலும் அவன் கையிலிருந்த கத்தி பளபளவென்று மின்னிற்று!

அந்த சமயத்திலும் அவளுடைய அழகு அவனை மயக்கிற்று. வசீகரித்தது! ஆனல் அவன் அதற்கு அடிமையாகவில்லை. தான் அவள் மேல் கொண்டிருந்த காதலையும் அடக்க முடியவில்லை.

மெதுவாக அவளுடைய அதரங்களில் ஒரு முத்தமிட்டான். ஆனல் அவள் விழிக்கவில்லை. ஒரே குத்து. ரத்த வெள்ளம். பரபரவென்று கீழே இறங்கி எங்கோ போய்விட்டான் சங்கர்!

மறு நாள் தினசரியில் பிரபல நடி சந்திரா கொலை செய்யப்பட்ட விவரம் பத்திரிகையில் வெளியாயிற்று,

ஆனல் அந்தக் கோரக்காட்சியின் காரணமான காதல் நாடகம் தெரிந்திருக்குமா?

ரூ. 60,000 மதிப்புள்ள நகைகள் கொடுக்கப்படுகின்றன

"அமெரிக்கன் நியூ கோல்ட்" அழியாத தயாரிப்பு உண்மையில் 8-வது அதிசயம். இந்தியா பூராவும் ஏற்கனவேயே பிரபலமாய் விட்டன. நிறம் மாறுமல இருக்கும் ஒரே கெமிகல தங்கம என பொதுமக்களும். பத்திரிகைகளும புகழ்ந்தது. எமது "அமெரிக்கன் நியூ கோல்டை" மேலும பிரபலப படுதத. 6 தோலா அமெரிக்கன் நியூ கோல்ட், 2 ஜதை தோடு. 2 ஜதை அழகிய கைவளையல்கள். 2 மோதிரம — அனைததும வசீகரமான மோஸ்தர் — எமது படங்களுடன கூடிய காடலாக்குடன தறகாலிகமாக கொடுகக உததேசிததுளளோம. முந்துங்கள்.

New Gold Supply Co., (S. M., M)
RAVI ROAD. — LAHORE.
(EAB)

முன் கதைச் சுருக்கம்

விஜயன் ஜமீன்தார் ஹரிஹர கோஷாலின் புத்திரன்: சீமை சென்று திரும்பியவன்: மனைவி இறந்துவிட்டாள்: ஒரே பிள்ளை தான் அவனுக்கு. கணேசபுரத்தில் இருந்த வீட்டைத் தானே நேரில் போய் காலி செய்வதற்காக அவன் வந்தான்: சிறு பிள்ளையையும் தன்னுடன் அழைத்துக்கொண்டே போனான். வீட்டில் அவன் எதிர்பார்த்த ஆஸாமி இல்லை. அனுராதா மட்டும் இருந்தாள்.

நமது தொடர் கதை

விஜயனின் காதலி

★

டாக்டர் சாட்டர்ஜி எழுதியது

2

விஜயன் மேல்நாட்டு உடை அணிந்து தலையில் ஹாட்டும், வாயில் சிகரெட்டும், இடுப்பில் கைத்துப்பாக்கியும், வைத்துக் கொண்டு கைப்பிரம்பைச் சுழற்றிக் கொண்டே பாபுவின் வீட்டில் நுழைந்தான். அவனுடன், இரண்டு மிராஜாபூர் தர்வான்கள், சில பிரஜைகள், விநோத கோஷ், ஆகியவர்களும், அவனுடைய மகனும் வந்தார்கள். சொத்தை அனுபவத்திற்குக் கொண்டு வர இந்தவிதமான பயங்களெல்லாம் இருக்கிறது. ஆயினும் மகனை செல்லப்பிள்ளையாக்காமல், திடமுள்ள நல்ல தைரியசாலியாக்க இது நல்ல சிக்ஷை. ஆகையால் பையன் கூட வந்திருந்தான். விநோதன் வரும்போதெல்லாம் தன் மனதிற்குள் "என்ன இருந்தாலும் அனுராதா பெண்! தனியாக இருக்கிறாள். இந்த பலாத்காரத்தை ஜயிக்க அவளால் முடியாது என்று தைரியப்படுத்திக் கொண்டே வந்தான். ஆயினும் ரிவால்வரைக் கூட எடுத்துச் செல்வது நல்லதென்று எண்ணினான்.

அவன் விநோத கோஷிடம் "அப்பெண் ரொம்ப துஷ்டை என்றும், சீக்கிரம் கும்பலைக் கூட்டி விடுவாள் என்றும், அவள் தான் கணவனுக்கு யோஜனை சொல்கிறவளென்றும் கேள்விப்பட்டேன். தவிரவும் அவளுடைய நடத்தை கூட சரியில்லை என்றும் கேள்வி" என்றான்.

"இல்லை பாபு! அப்படி ஒன்றும் நான் கேள்விப்படவில்லையே!" என்றான் விநோதன்.

"நான் கேள்விப்பட்டேன்!"

எல்லோரும் உள்ளே நுழைந்து வந்தனர். விநோதன் முற்றத்தில் நின்று சுற்று முற்றும் பார்க்கலானான். ஆமாம்! பாபுவின் வீடுதான்! எதிரே பூஜை மண்டபம்! இன்று வரை சிலமடையாமல் அப்படியே இருந்தது. ஆனால் கிலமாகும் நிலைமைக்கு வந்து கொண்டு இருந்தது. ஒருபுறம் சிறு சிறு அறைகள், பெரிய ஹால், எல்லாவற்றின் நிலைமையும் ஒரே மாதிரியாகத் தான் இருந்தது, எங்கும் புறாக்கள், குருவிகள், வௌவால்கள் இவை குடியிருந்தன.

"யார் வீட்டில்?" என்று குரல் கொடுத்தான் தர்வான்.

அவனுடைய மரியாதையற்ற குரலைக் கேட்டு விநோதனும் இன்னும் இதரர்களும் வெட்கத்தால் குன்றினர், "ராதா அக்காவுக்கு நான் போய் தகவல் கொடுக்கிறேன்" என்று சொல்லி விநோதன் உள்ளே சென்றான்.

அவனுடைய குரலிலிருந்தும் அவள் வார்த்தையாடுவதிலிருந்தும், இன்னும் இந்த வீட்டைப் பற்றி மரியாதை இல்லாமல் பேச அவனுக்கு முடியவில்லை என்பது தெரிந்தது.

அனுராதா சமையல் செய்து கொண்டிருந்தாள், விநோதன் உள்ளே சென்று வணக்கத்துடன் "அக்கா! சின்ன பாபு வந்திருக்கிறார்! வெளியே நின்றிருக்கிறார்!" என்றான்.

இந்த துர்ப்பாக்ய தினத்தை அவள் தினம் தினம் எண்ணி எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். சட்டென்று எழுந்து கையை அலம்பி விட்டு, தன் மருமகனிடம் "வெளியே ஒரு ஜமக்காளத்தை எடுத்துப் போட்டு விட்டு, அத்தை இதோ வருகிறாள் என்று சொல்" என்று சொல்லி விட்டு, பிறகு விநோதனிடம் "எனக்கு அதிக நாழியாகாது. பாபு கோபித்துக் கொள்ள வேண்டாம்! எனக்காகச் சற்று நீ அவரை உட்காரச் சொல்" என்றாள்.

விநோதன் வெட்கமடைந்த முகத்துடன் "என்ன பண்ணுவது அக்கா! நாங்கள் ஏழைக் குடிகள்! ஜமீந்தார் உத்திர விட்டால் அதை மறுத்து 'இல்லை' என்று சொல்வதற்கில்லை. ஆகையால்......"

"விநோத அண்ணா அது எனக்குத் தெரியும்!" என்றாள் அனுராதா.

விநோதன் சென்றான். வெளியே ஜமக்காளம் விரிக்கப்பட்டிருந்தது. ஆனால் யாரும் அதில் உட்காரவில்லை. விஜயன் சுருட்டுப் பிடித்துக் கொண்டே பிரம்பைச் சுழற்றிக்கொண்டு உலாத்திக்கொண்டிருந்தான்

ஐந்தாறு நிமிஷங்களுக்குப் பிறகு ஸந்தோஷ் வெளியே வந்து கதவின் பக்கம் சுட்டிக் காட்டி பயந்து கொண்டே 'அத்தை வந்திருக்கிறாள்' என்றான்.

விஜயன் திடுக்கிட்டு நின்றுவிட்டான். பெரிய இடத்துப் பெண். அவளை என்ன சொல்லி அழைப்பது? அவனுக்கு சங்கடமாகிவிட்டது. ஆனால் தன் பலவீனத்தைப் பார்த்தால் காரியம் நடக்காது. ஆகையால் அவன், மறைவிலிருந்த அனுராதாவின் பக்கம் பார்த்து "இந்த வீடு எங்களுடையது என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும்!" என்றான்.

"தெரியும்!" என்று உள்ளேயிருந்து பதில் வந்தது. "பின் ஏன் இதைக் காலி செய்யவில்லை?"

அனுராதா முன் போலவே தன் மருமகன் மூலம் தன் காரணத்தைச் சொல்ல முயற்சித்தாள். ஆனால் பையன் அவ்வளவு சூடிகையானவனல்ல, தவிர புது ஜமீன்தார் கடுமையானவர் என்ற வார்த்தைகள் அவன் காதிலும் விழுந்திருந்தன, ஆகையால் அவன் பயந்து விட்டான். அவனால் ஒரு வார்த்தை கூட ஸ்பஷ்டமாகச் சொல்ல முடியவில்லை.

விஜயன் ஐந்தாறு நிமிஷங்கள் வரை தைரியத்துடன் அறிய முயற்சித்தான். பிறகு சட்டென்று "உன் அத்தைக்கு ஏதாவது சொல்ல வேண்டுமானால் எதிரே வந்து சொல்லட்டும். அனாவசியமாக பொழுதை வீணாக்க எனக்கு சமயம் இல்லை: நான் புலி—கரடி அல்ல, அவர்களைப் பிடித்து விழுங்கி விட! ஏன் வீட்டை விடவில்லை? சொல்லுங்கள்!" என்றான்.

அனுராதா வெளியே வரவில்லை. அவள் அங்கிருந்தே பேசினாள். சந்தோஷன் மூலமாக அல்ல. அவள் வாய்ப்படவே ஸ்பஷ்டமாக "வீட்டை விடும்படி பேச்சு நடைபெறவில்லை! தங்கள் தந்தை ஹரிஹர பாபு இந்த வீட்டின் உட்புறம் நாங்கள் இருக்கலாம் என்று சொல்லி இருக்கிறார்" என்றாள்.

"ஏதாவது எழுத்து மூலம் உண்டா?"

"இல்லை! எழுத்து மூலம் ஒன்றும் இல்லை! தவிர அவர் தான் இப்பொழுதும் இருக்கிறாரே! அவரிடம் கேட்டால் தெரிந்து போகிறது.

"எனக்குக் கேட்க வேண்டிய அவசியமில்லை. இந்த ஷரத்தை ஏன் அவரிடம் எழுதி வாங்கவில்லை?"

இது அவசியம் என்று "அண்ணா நினைக்கவில்லை. அவருடைய வார்த்தையை விட எழுத்து மூலம் பெரியதாகி விடும் என்பது ஒருக்கால் அண்ணாவுக்கு தெரியாதிருந்திருக்கலாம்!"

இந்த வார்த்தைகளுக்கு சரியான பதில் விஜயனுக்குக்கிடைக்காமையால் அவன் பேசாமல் இருந்து விட்டான். ஆனால் அடுத்த கணமே உள்ளே இருந்து பதில் வந்தது.

"ஆனால் அண்ணாவின் தரப்பில் ஷரத்துக்கள் தவறியதால் எல்லா ஷரத்துகளும் மாறிவிட்டன. இந்த வீட்டில் இருக்க எங்களுக்கு அதிகாரம் இல்லை. ஆனால்! நான் தனி ஸ்திரீ! இது அநாதைக் குழந்தை! இதற்குத் தாய் தந்தை யாரும் கிடையாது. நான் தான் இதைக் காப்பாற்றுகிறேன. இந்த விதமான துர்த்தசையில் தயை செய்து எங்களை நாலைந்து நாள் இங்கே தங்கவிடாவிட்டால், திடீரென்று தனியாக நான் எங்கே போவேன்! இதைத் தான் யோசிக்கிறேன்' என்றாள் அனுராதா.

"இந்த வார்த்தைக்குப் பதில் நானா சொல்ல வேண்டும்? ஏன் உங்கள் அண்ணா எங்கே?" என்றான் விஜயன்.

"எங்கே இருக்கிறானோ எனக்குத் தெரியாது! நான் இதுவரை தங்களைக் காணாமல இருப்பது, தாங்கள் வெறுப்பு அடைவீர்கள் என்ற பயத்தினால்தான்" என்று சொல்லி கண நேரம் மௌனமாக இருந்து தன்னைச் சுதாரித்துக் கொண்டு மீண்டும் கூறலானாள்.

"தாங்கள் எஜமானர். தங்களிடம் எதையும் ஒளிக்கமாட்டேன். என்னுடைய கஷ்டமான நிலைமையைத் தங்களிடம் சொல்லி விட்டேன். இந்த வீட்டில கட்டாயமாக இருக்க வேண்டுமென்று ஒரு நாள் கூட நான் எண்ணவில்லை. சிறிது நாட்களுக்குப் பிறகு நானே சென்று விடுவேன்!" என்றாள்.

அவளுடைய குரலிலிருந்து, அவள் கண்களில் கண்ணீர் பெருகுகிறதென்பது வெளியே தெரிந்தது. விஜயனுக்குத் துக்கம் உண்டாயிற்று. கூட மனதில் சந்தோஷமும் உண்டாயிற்று. இவளை வெளியேற்ற எத்தனை கஷ்டங்கள் படவேண்டுமென்று அவன் எண்ணினானோ அதொன்றும் நடைபெறவில்லை. அவள் கண்ணீருடன் பிச்சை கேட்கிறாள்! அவன் பையிலிருந்த கைத்துப்பாக்கி, தர்வானின் கைத்தடிகள், உள்ளுக்குள் அவனையே குத்தலாயின. ஆயினும் தன் பலவீனத்தை வெளிக்குக் காட்டாமல், "இருப்பதைப்பற்றி எனக்கொரு கஷ்டமும் இல்லை. ஆனால் வீடு எனக்கே வேண்டி இருக்கிறது. இப்பொழுது எங்கே இருக்கிறேனோ, அங்கே பெரிய கஷ்டமாக இருக்கிறது, தவிர எங்கள் வீட்டு ஸ்திரீகள் கூட ஒரு முறை வந்து பார்ப்பதற்கு விரும்புகிறார்கள்" என்றான்.

"நல்லது, வரட்டுமே! வெளி அறையில் தாங்கள் சௌக்யமாக இருக்கலாம். ஒரு கஷ்டமும் இருக்காது. தவிர வெளியூரில் அவர்களுக்கும் யாராவது அறிமுகமானவர்கள் வேண்டாமா? ஆகையால் நான் அவர்களுக்கு மிகுந்த உதவியாக இருப்பேன்" என்றாள் அனுராதா.

இந்த தடவை விஜயன் வெட்கமடைந்து, கஷ்டத்துடன் "இல்லை! இல்லை! இது எங்காவது நடக்குமா? அவர்களுடன் கூட ஆட்கள் எல்லோரும் வருகின்றனர் நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டி இருக்காது. ஆனால் நான் உள் அறையை ஒரு முறை பார்க்கலாமா?" என்றான்.

"ஏன் பார்க்க முடியாது? இது தங்கள் வீடு தானே! வாருங்கள்!" என்று பதில் வந்தது.

உள்ளே நுழைந்த விஜயன் க்ஷணத்திற்குள் அவள் முகத்தை நன்றாகப் பார்த்து விட்டான். தலையில் துணி இருந்தது. ஆனால் முக்காடில்லை பாதி அழுக்கடைந்த சாதாரண புடவை தான் அணிந்திருந்தாள். நகை ஒன்றும் இல்லை இரண்டு கைகளிலும் ஒவ்வொரு பொன் வளைதான் இருந்தது அதுவும் பழையகாலத்தியது. மறைவிலிருந்து கேட்ட அவளுடைய கண்ணீர்க் குரல் விஜயனுக்கு மிகுந்த மதுரமாக இருந்தது அவளும் அப்படித் தான் இருப்பாள் என்று அவன் எண்ணினான். ஆனால் பார்த்த பிறகு, அவன் எண்ணியதைப் போல அங்கு ஒன்றுமில்லை. நிறம் சிகப்பல்ல. மாநிறம்தான் சாதாரண கிராமத்துப் பெண்கள் எப்படி இருப்பார்களோ அப்படியே தான் இவளும் காணப்பட்டாள்.

சரீரம் மெல்லியதாக இருந்ததிலிருந்து அவள் வேலை செய்யாமல் சோம்பேறியாக இருப்பவள் அல்ல என்பது விளங்கியது. அவளிடம் ஒரு விசேஷம்! அதாவது அவள் நெற்றியில் ஆச்சர்யகரமான தோஷமற்ற சௌந்தர்யத்தின் குறி தென்பட்டது.

அவள் விநோதனிடம் 'விநோத அண்ணா, பாபுஜிக்கு நீ எல்லாவற்றையும் கொண்டு காட்டு. நான் சமையலறையிலிருக்கிறேன்' என்றாள்.

"ராதா அக்கா, நீ கூட வரவில்லையா?" என்றான் விநோதன்.

"இல்லை!"

மேலே சென்று விஜயன் யாவற்றையும் பார்வையிட்டான். அநேக அறைகள் இருந்தன. புராதன காலத்திய பல சாமான்கள் அப்பொழுதும் ஒவ்வொரு அறையிலும் ஏதாவது கிடந்தன. சில உடைந்து கிடந்தன. சில உடைய வழி பார்த்துக் கொண்டிருந்தன. இப்பொழுது அவற்றின் விலை சாமான்யமானாலும் ஒரு காலத்தில் அது பிரமாதமாக இருந்தது: வெளியறையைப் போல இதுவும் ஜீர்ணமாகும் நிலைமையில் தான் இருந்தது. எல்லா வஸ்துக்களிலும், தரித்திரத்தின் சாயை தென்பட்டது.

விஜயன் கீழே இறங்கி வந்ததும் அனுராதா சமையலறைக் கதவின் ஓரம் வந்து நின்றாள். எளிமையும், தாழ்மை நிலைமையும் வந்த போதிலும்கூட அவள் பெரிய இடத்துப் பெண். ஆகையால் விஜயன் அவளை 'நீ' என்ற அழைக்காமல் 'நீங்கள்' என்றே அழைத்தான்.

"நீங்கள் இந்த வீட்டில் இன்னும் எத்தனை நாட்கள் இருக்க விரும்புகிறீர்கள்?"

"நிச்சயமாக இப்பொழுது சொல்ல முடியாது. எத்தனை நாள் தாங்கள் தயை செய்து இருக்க விடுகிறீர்களோ!"

"சிறிது நாள் இருக்கலாம்! ஆனால், அதிக நாள் இருக்க முடியாது. பிறகு தாங்கள் எங்கே செல்வீர்கள்?"

"இதைத்தான் ராப்பகல் யோசித்துக் கொண்டிருக்கிறேன்!"

"கணவன் இருக்குமிடம் தங்களுக்குத் தெரியும் என்று ஜனங்கள் சொல்கிறார்கள்?"

"அவர்கள் இன்னும் என்னென்ன சொல்கிறார்கள்?"

விஜயனால் இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க முடியவில்லை. அனுராதா மீண்டும் "எனக்குத் தெரியாதென்று நான் முன்பே தங்களிடம் சொல்லவில்லையா? தவிர, தெரிந்திருந்தால்கூட அண்ணாவைப் பிடித்துக் கொடுப்பேனா? இதுதான் தங்கள் உத்தரவா?" என்றாள் அனுராதா.

அவளுடைய குரலில திரஸ்காரத்தின் சாயை இருந்தது. விஜயன் வெட்கமடைந்து போனான். அவளுடைய வம்சத்தின் குணம் அவள் மனதினின்றும் இன்னும் மறையவில்லை என்பதைக் கண்டு கொண்டான் அவன் "இல்லை! இதற்காக நான், தங்களிடம் சொல்லமாட்டேன. முடியுமானால் நானே தேடிப்பிடிக்கிறேன். விட்டு விடமாட்டேன். ஆனால், ஒரு விஷயம், இவ்வளவு நாட்களாக அவன் எங்களுக்கு இழைத்து வந்த தீங்கு? அதைக் கூட தங்களுக்குத் தெரியாதென்று சொல்ல விரும்புகிறீர்களா?" என்றான்.

பதில் ஒன்றும் வரவில்லை. விஜயன் மீண்டும் "உலகில் நன்றி என்று ஒன்று இருக்கிறதா? தங்கள் சகோதரனுக்கு தாங்கள் என்றாவது ஒரு நாள் இதைப் பற்றி ஆலோசனை சொல்ல முடியாதா? என் தந்தை கபடமற்ற மனிதர். தங்கள் வம்சத்தினிடம் அவருக்கு அன்பு உண்டு. பூரா நம்பிக்கையும் உண்டு. ஆகையால் தான் அவர் கணவனிடம் யாவற்றையும் ஒப்புவித்திருந்தார். அதற்கு பதில் இது தானா? ஆனால் ஒன்று மாத்திரம் நிச்சயம் அறியுங்கள் நான ஊரில் இருந்திருந்தால், இம்மாதிரி ஒரு போதும் விட்டிருக்க மாட்டேன்" என்றான்.

அனுராதா மௌனமாக இருந்தவள் அப்படியே மௌனமாகவே இருந்தாள். தன் வார்த்தை ஒன்றுக்கும் பதிலே கிடைக்காததைக் கண்டு விஜயன் மனதிற்குள் இன்னும் ஆத்திரமடைந்தான். அவன் மனதில் உண்டாகி இருந்த சிறிது கருணையும் மறைந்து விட்டது. அவன் சற்றுக் கடுமையடைந்து "நான் ரொம்ப கடுமையானவன். இந்த தயாதாக்ஷிண்யங்களொன்றையும் நான் பார்க்க மாட்டேன்! குற்றம் செய்து விட்டு என்னிடம் யாரும் தப்ப முடியாது. தங்கள் அண்ணாவைச் சந்திக்கும்போது இதை மட்டும் சொல்லி வையுங்கள்" என்றான்.

அனுராதா முன் போல் பேசாமலே இருந்தாள். விஜயன் மீண்டும் "இன்றைய தினத்திலிருந்து இந்த வீடு பூராவும் என் வசமாக வேணடும். வெளி அறைகள் சீர் ஆன பின் இரண்டு மூன்று நாட்களுக்கெல்லாம் இங்கே வருவேன். அதன் பின் ஸ்திரீகள் வருவார்கள். தாங்கள் வேறு எங்காவது போகும் வரை கீழே உள்ள அறையில் வசியுங்கள்! ஆனால் எந்தச் சாமானையும் இதை விட்டு அப்புறப்படுத்த முயற்சிக்கக் கூடாது' என்றான்.

இதற்குள் அவன் மகன் "அப்பா, தாகமாக இருக்கிறது. ஜலம் வேண்டும்" என்றான்.

"இங்கே எங்கே இருக்கிறது ஜலம்?" என்றான் விஜயன்.

அனுராதா கை ஜாடையால் அவனைத் தன்னிடம் அழைத்து சமையலறைக்குள் அழைத்துச் சென்று "இளநீர் இருக்கிறது சாப்பிடுகிறாயா?" என்றாள்.

"சாப்பிடுகிறேன்" என்றான் பையன்.

அவன் வயிறு நிறைய இளநீர் குடித்து, வழுக்கையும் தின்று விட்டு, வெளியே வந்து "அப்பா நீயும் குடிக்கிறாயா? நல்ல தித்திப்பாக இருக்கிறது!" என்றான்.

"வேண்டாம்!"

"சாப்பிட வில்லையா அப்பா! நிறைய இருக்கிறது! எல்லாம் நம்முடையது தானே!"

விஷயம் ஒன்றுமில்லை எனினும், மகனின் வாயால் இந்த வார்த்தைகளைக் கேட்டு விஜயனுக்கு வெட்கமாகி விட்டது. அவன் "இல்லே! நான் சாப்பிட வில்லை! நீ போ!" என்றான்.

பாபுவின் வீட்டை தன் வசப்படுத்தி விஜயன் உட்கார்ந்து கொண்டான். இரண்டு அறைகளைத் தன் உபயோகத்திற்காக வைத்துக் கொண்டு, மற்றவைகளில் தன் கச்சேரியை நடத்தலானான். விநோத கோஷ் ஒரு காலத்தில் அந்த ஜமீனதாரியில் ஏதோ வேலை பார்த்து வந்தான். அந்தக் காரணத்தின் பேரில் அவன் குமாஸ்தாவாக நியமனமானான். ஆயினும் சச்சரவு தீரவில்லை இதற்கு முக்ய காரணம கணவன் சட்டர்ஜீ தான். அவன் வசூலான ரூபாய்க்கு உடனுக்குடன் ரசீது கொடுப்பதை அவமரியாதை என்று எண்ணினான். ஏனென்றால் 'தனது சட்டர்ஜி வம்சத்திற்கு கௌரவக்குறைவான, அவநம்பிக்கை என்பது அதில் ஏற்படுகிறது. ஆகையால் அவன் மறைந்த பிறகு, குடிகளுக்கு கஷ்டமாகி விட்டது. வாய் சாக்ஷிகள்-பிரமாணங்கள்-இவைகளுடன் குடிகள் தினம் வரலானார்கள். யார் எவ்வளவு ரூபாய் கொடுத்தார்கள்? எவ்வளவு பாக்கி இருக்கிறது?—இதை நிர்ணயிப்பது சிரம சாத்யமாகவும், கஷ்டமான பிரச்னையாகவும் ஆகி விட்டது. எவ்வளவு சீக்கிரம் கல்கத்தா திரும்பிச் செல்ல வேண்டுமென்று விஜயன் வந்தானோ, அவ்வளவு சீக்கிரம் போக முடியவில்லை ஒரு நாள், இரண்டு நாள் என்று பத்துப் பனிரண்டு தினங்கள் ஆகிவிட்டன.

இங்கே அவன் மகனுக்கு சந்தோஷனுடன் நட்பு ஏற்பட்டு விட்டது. வயதில் அவன் இரண்டொரு வருஷம் குறைந்தவனாக இருந்தாலும், மற்ற இதர சமூக-குடும்ப விஷயங்களில் அவன் பெரியவனாக இருந்தான். ஆனால் வேறு நண்பர்கள் கிடைக்காமையால் அவன் சந்தோஷனுடனேயே சேர்ந்து இருக்கலானான். எப்பொழுதும் அவனுடனேயே, வீட்டின் உட்புறத்திலேயே இருப்பான். தோட்டம், துறவு, ஆறு, குளம், எங்கும் சுற்றுவது, மாங்காய் பறிப்பது, குருவிக் கூடுகளைத் தேடுவது, ஸந்தோஷின் அத்தையிடம் சாப்பிடுவது, சந்தோஷனைப் பார்த்து, அவனும் அனுராதாவை, 'அத்தை' என்று கூப்பிடுவது; இதிலேயே கழிந்து வந்தது அவனுடைய நாட்கள்.

விஜயன் பணம் காசுத் தகராறிலேயே சிக்கி இருந்ததால், பையனை எப்பொழுதும் கவனிக்க முடியவில்லை. அவனுக்கு, சமயம் கிடைக்கும் பொழுது, பையன் இருக்குமிடம் தெரிவதில்லை. சில நாட்களில் அவனை அதட்டி மிரட்டி அருகே உட்கார வைத்திருந்தால்கூட விடுதலை கிடைத்ததும் நேரே அத்தையின் சமையலறைக்குள் ஓடி விடுவான். சந்தோஷனுடன் உட்கார்ந்து மத்யானம் பருப்புச் சாதமும் மாலையில் ரொட்டியும், பக்ஷணங்களும் சாப்பிடுவான்.

அன்று மாலை பிரஜைகள் யாரும் வரவில்லை. விஜயன் டீ அருந்தி விட்டு சுருட்டுப் பற்ற வைத்துக் கொண்டு, நதிக் கரை சென்று உலாவி வருவோம் என்று எண்ணினான். சட்டென, அன்று பூராவும் பையனைக் காணவில்லையே என்று ஞாபகம் வந்தது. பழைய வேலைக்காரன் நின்று கொண்டிருந்தான். அவனிடம் "குமார் எங்கே" என்று கேட்டான்.

அவன் கை ஜாடை காட்டிக் கொண்டே "உள்ளே!" என்றான்.

'சாப்பிட்டானா இன்றைக்கு?"

"இல்லை!"

"பிடித்து இழுத்து வந்து ஏன் சாப்பிட வைக்கவில்லை?"

"இங்கே சாப்பிடவே விரும்புவதில்லை, எஜமான்! கோபித்துக் கொண்டு வாரி இறைக்கிறான்."

'நாளையிலிருந்து அவனை என்னுடன் சாப்பிட உட்கார வை!" என்று சொல்லி விட்டு, என்ன எண்ணினானோ என்னமோ, வெளியே உலவாச் செல்வதற்குப் பதில் உள்ளே சென்றான்.

உள்பக்கத்திலிருந்து "அத்தை! ஒரு ரொட்டியும் இரண்டு லட்டும் போடு, சீக்கிரம்" என்று கேட்கும் தன் மகனின் குரல் கேட்டது

அவன் யாரை கட்டளை இட்டானோ, அவள், "கீழே இறங்கி வாப்பா! நான் கூட உங்களைப் போல் மரத்தில் ஏறிவர முடியுமா?" என்றாள்

"ஏற முடியும் அத்தை கொஞ்சம் கூடக் கஷ்டம் இல்லை, அந்தப் பெரிய கிளையில் கால் வைத்து, இந்த சின்னக் கிளையைப் பிடித்துக் கொண்டு சுலபமாக ஏறி வரலாம்' என்று பதில் வந்தது.

விஜயன், எதிரே வந்து நின்றான். சமையலறைக்கு நேர் எதிரே ஒரு பெரிய மாமரம் இருந்தது. அதனுடைய பெரிய கிளையில் குமாரும் சந்தோஷும் உட்கார்ந்திருந்தார்கள். காலைத் தொங்கவிட்டுக் கொண்டு மரத்தில் சாய்ந்து கொண்டு இருவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். விஜயனைக் கண்டதும் இருவரும் பயந்து போயினர். அனுராதா சமையலறை கதவின் பின மறைந்து நின்று கொண்டிருந்தாள்

"இது தான் இவர்கள் சாப்பிடும் இடமா?", என்று கேட்டான் விஜயன்.

யாரும் பதில் சொல்லவில்லை. விஜயன் உள்ளே இருப்பவளை லட்சியம் வைத்து "தங்களால் தான் இவைகள் இவ்வளவு லூட்டி அடிக்கின்றன என்று எண்ணுகிறேன்!" என்றான்.

இந்தத் தடவை அனுராதா மிருதுவான குரலில் "ஆமாம்!" என்று பதில் சொன்னாள்.

"ஆயினும் இவைகளைத் தலைமேல் வைத்துக், 'கொள்வதில்

முதுபெரும் புலவர் பண்டித மணி மு. கதிரேசச் செட்டியாருக்கு "மகா மகோபாத்தியாயர்" பட்டம் கிடைத்ததை கீழச்சிவல்பட்டி பி. அழகாபுரி நகரத்தார் பாராட்டி விருந்தளித்தனர்.

பின்வாங்குவதில்லை. ஏன் இவைகளுக்கு இவ்வளவு இடப் கொடுக்கிறீர்கள்?"

"இடம் கொடுக்காவிட்டால் இன்னும் அதிக உபத்ரவங்கள் செய்யும். அந்தபயத்தால்தான்!"

"ஆனல் எங்கள் வீட்டில் அப்படி கொட்டம ஒன்றும் செய்யவில்லையே!"

"செய்யாமலிருந்திருக்கலாம்! அதற்கு அம்மா இல்லை, பாட்டி நோய் வாய்ப்பட்டுக் கிடக்கிருள்! தந்தை வெளி வேலையில் உழன்று கொண்டிருக்கிருர். பின் யாரிடம் கொட்டம் அடிப்பது?"

விஜயனுக்கு இந்த விஷயம் தெரியாததில்லை! ஆயினும் பையனுக்குத் தாயில்லை என்றவிஷயம் பிறர் வாயிலாகக் கேட்டு அவனுக்குத் துக்கம் உண்டாயிற்று. "தங்களுககு எல்லாம் தெரிந்துவிட்டதென்று தெரிகிறது! யார் சொன்னூர்கள் தங்களிடம்? குமாரா?" என்ருன்.

அனுராதா மெள்ள "சொல்லககூடிய வயது அவனுக்கு வரவில்லை. ஆயினும் அவன் வாய் மூலமாகத்தான கேட்டேன். மத்யானம் இவர்களை நான் வெய்யிலில் அலைய விடுவதில்லை. ஆயினும எப்படியோ ஏமாற்றிவிட்டு ஓடி விடுகின்றன! போக முடியாத தினத்தன்று என்னுடன் படுத்துக் கொண்டு, வீட்டுக கதைகளெல்லாவற்றையும் சொல்வான்!" என்ளுள்.

விஜயனுல் அவள் முகத்தைப் பார்கக முடியவில்லை. ஆனல் முந்திய தினத்தைப் போலவே இன்றும் அவளுடைய குரல் மதுரமாகவே இருந்தது.

"இந்த தடவை அவன் வீட்டுக்குச் சென்ருல் ரொம்ப கஷ்டப்பட வேண்டி வரும்" என்ருன்.

"ஏன்?"

"ஏனென்ருல் ஹூட்டி அடிப்பது ஒரு போதை மாதிரி! கொட்டம அடிக்க முடியா விட்டால் கஷ்டமாகி விடுகிறது. ஹடம் பிடிக்கவும் நேரிடுகிறது. தவிர அவனுடைய பிடிவாதத்தை அங்கே யார் சமாதானம் செய்வார்கள்? இரண்டொரு தினங்களில் ஓடப் பார்ப்பான்!" என்ருன்

அனுராதா தயக்கத்துடன் "இல்லை! இல்லை! மறந்து விடுவான். குமார்! வாப்பா! வா! ரொட்டியை எடுத்துக் கொண்டு போ" என்ருள்.

குமார் கையில தட்டுடன் கீழே இறங்கி வந்து, அத்தையிடமிருந்து இன்னும சில ரொட்டிகளை வாங்கிக் கொண்டு நின்று கொணடே தின்னலானுன் மரத்தில் ஏறவிலலை. விஜயன் பார்த்தான். "பணக்காரர்கள என்ற தோரணையில் அவன் கண்களுக்கு அந்த ஆகாரம துச்சமாக இருந்த போதிலும், உண்மையான, அன்பு, கெளரவம், என்ற முறையில அது லவலேசமும் துச்சமல்ல. பையன் ஏன் அத்தையின் சமையலறையைச் சுற்றிக் கொண்டிருக்கிருன். இதன் காரணம் விஜயனுக்கு விளங்கி விட்டது. தன் மகனின் மேலிருக்கும் வாஞ்சையால், இவர்களுக்கு அதிகச் செலவென்று சொல்லி, அவர்களுக்கு உபசார வார்த்தைகள் சொலல வேண்டுமென்று எண்ணித் தான் வந்தான். சொல்லிக் கொண்டும் இருந்தான். இதற்குள் ஒரு தடை வந்துசேர்ந்தது. குமார், அனுராதாவை நோக்கி "அத்தை! நேற்றைப் போலவே இன்றும் சந்திர போளி செய் என்று சொன்னேனே ஏன் செய்யவில்லை?" என்று கேட்டான்.

"தவறிப் போய் விட்டது! சற்று கண் அயர்ந்தேன், பூனை பாலை உருட்டி விட்டது. நாளைக்கு அமமாதிரி ஆகாது!" என்ருள் அனுராதா.

"எந்தப் பூனை? சொல்! அந்த வெள்ளைப் பூனையா?"

"அது வாய்த்தான் இருக்கும்" என்று சொல்லி அனுராதா அவளுடைய நெற்றியில் படிந்திருந்த தலை மயிரைக் கோதலானுள்.

"கொடடம் அடிப்பதை பார்த்துக் கொணடு தான் வருகிறேன். வர வர கொடுமையாகிக் கொண்டே வருகிறது" என்ருன் விஜயன்.

"தண்ணீர் எங்கே குடிப்பதற்கு?" என்ருன் குமார்.

"அடே! ஞாபகமில்லை, கொண்டு வந்து தருகிறேன்!" என்ருள் அனுராதா.

"அத்தை! நீ எல்லாவற்றையும் மறந்து தான் விடுகிருய் உனக்கு ஒன்றுமே நினைவு இருப்பதில்லை!" என்ருன் குமார்.

"ஆமாம்!" என்று சொல்லி அனுராதா சிரித்தாள் அஜாக்கிரதையின் காரணமாக விஜயன் இந்தச் சிரிப்பைப் பார்த்து விட்டான். தன்னுடைய உபசார வார்த்தைகளை அவள் தப்பர்த்தம் செய்து கொண்டு, தன்னுடைய ஏழ்மை நிலைமையைக் குத்திக் காட்டுவதாக எண்ணி விடுவாள் என்ற பயத்தினுல் தன் புத்திரனின், முறையற்ற செய்கைக்கு மன்னிப்புக் கேட்க அவனுல் முடியவில்லை

மறுநாள் மத்யானம் அனுராதா குமாரையும் சந்தோஷையும உட்காரவைத்து சாதப் போட்டுக் கொணடிருந்தாள். தலை முக்காடு அகன்றிருநதது மேற சேலையும விலகி இருநதது. இதற்குள் திடீரென்று கதவருகில் யாருடைய நிழலோ தென் பட்டது தலை நிமிர்நது பார்த்தாள் அனுராதா. சின்ன பாபு சட்டென்று எழுந்து உடையைச் சரி செய்து கொண்டு நின்ருன்.

"ஒரு முக்யமான யோசனை கேட்பதற்காகத் தங்களிடம் வநதிருக்கிறேன் விநோத கோஷ் இந்த கிராமத்து மனிதர். தாங்கள் தான் அறிந்திருப்பீர்கள்! அவர் எப்படி? சொல்ல முடியுமா? அவரைக் கனேசபுரத்திற்கு நிரந்தர குமாஸ்தாவாக நியமிக்கலாம் என்று உத்தேசம் அவனைப் பூநாவும் நம்பலாமா? முடியாதா? தங்கள் அபிப்பிராயம் என்ன?" என்ருன் விஜயன்

விநோதன் ஒரு வார காலமாக ஏதோ சரியாகத்தான் வேலை செய்து வருகிருன்! எந்தவித தகராறும் இல்லை திடீரென்று புயந்து அவனுடைய நடத்தையைப் பற்றி விசாரிக்கக் காரணமென்ன? அனுராதாவுக்கு இது விளங்கவில்லை. அவள் மிருதுவான குரலில் "விநோதண்ணு ஏதாவது செய்து விட்டாரா என்ன?" என்ருள்.

"இதுவரை ஒன்றும் செய்யவில்லை! ஆயினும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியது அவசியமல்லவா?"

"நான் அவரை நல்லவரென்று தான் எண்ணி வருகிறேன்!"

"உண்மையாகவே நினைக்கிறீர்களா? இல்லை நிந்திக்க வேண்டாமென்று நல்லவன் என்கிறீர்களா?"

"நான் சொல்லும், நல்லது—கெட்டதுகளுக்கு என்ன மதிப்பு இருக்கிறது?"

"ஏன் இல்லை! அவர் தங்களைத் தான் சரியான சாக்ஷியாக எண்ணி இருக்கிருர்!"

அனுராதா சிறிது யோசித்து விட்டு "அவர் நல்ல மனிதர் தான். ஆயினும் சற்றுக் கண் பார்த்துக் கொள்ள வேண்டும். தன்னுடைய அஜாக்ரதையினலேயே நல்ல மனிதர்கள் கூட கெட்ட மனிதராகி விடுகிருர்கள்! இது ஒரு ஆச்சர்யமல்ல!" என்ருள்.

"உண்மை என்னவோ அது தான்! காரணம், குற்றத்திற்குக் காரணம் தேடப் போனல் அநேகமாக இப்படித் தான் ஆகி விடுகிறது!" என்று சொல்லி, பிறகு தன்மகன் பக்கம் பார்த்து உனக்கு அதிர்ஷ்டம் இருக்கிறது. ஆகையால்தான் திடீரென்று ஒரு அத்தை கிடைத்து விட்டாள். இல்லா விட்டால் இந்தப் பட்டிக் காட்டில் நீ பட்டினி கிடக்க வேண்டி இருந்திருக்கும்" என்ருன் விஜயன்.

அனுராதா மெதுவாக "ஏன் தங்களுக்கு இங்கே, சாப்பிடக்கொள்ள அசெளகரியமாக இருக்கிறதா?" என்ருள்.

விஜயன் சிரித்துக் கொண்டே "இல்லா விட்டால்? அப்படித் தான் சொல்கிறேன். எப்பொழுதும் வெளியூர்களிலேயே நான நாட்களை கழிக்கிறேன். ஆகையால் ஆகார விஷயத்தைப்பற்றி விசேஷ சிரத்தை எடுத்துக் கொள்வதில்லை." என்று சொல்லி விட்டு அங்கிருந்து சென்ருன்.

அனுராதா ஜன்னல் இடுக்கினுல் பார்த்தாள், விஜயன் அதுவரை ஸ்நானம கூடச் செய்யவில்லை.

"சர்மா" மொழி பெயர்த்தது,

(தொடரும்)

சோப் விலைகள்

அடியிற் கண்ட பிரபல சோப்புகளுக்கும், மற்ற பொருள்களுக்கும் தற்காலத்தில் கொடுக்க வேண்டிய் நியாயமான விலைகள் கீழே குறிக்கப்பட்டிருக்கின்றன

ஸன்லைட் சோப்	பெரிய பெட்டி ..	5	அணு
,, ...	சிறிய பெட்டி ..	1½	,,
லைப்பாய் சோப்	பெரிய பெட்டி ..	6	,,
,, ...	சிறிய பெட்டி ..	1½	,,
லக்ஸ் டாய்லெட் சோப் ..	பெரிய ஸைஸ் ..	4	,,
,, ...	சிறிய சைஸ் ..	1¼	,,
லைப்பாய் டாய்லெட் சோப் ..	பெரிய சைஸ் ..	4	,,
,, ...	சிறிய சைஸ் ..	1¼	,,
லக்ஸ்	பெரிய பாக்கெட் ..	12	,,
,, ...	மத்திய சைஸ் ..	6	,,
,, ...	சிறிய பாக்கெட் ..	3	,,
விம்	பெரிய டின் ..	12	,,
,, ...	மத்தியதர டின் ..	6	,,
"மங்கி" பிராண்டு சோப் ..	இரண்டு கட்டிகள் கொண்ட பெட்டி 1-க்கு ..	6	,,
காஷேஜ் எம்ப்ரஸ் பேல் சோப்	பார் 1-க்கு ..	5½	,,

பொது ஜனங்களின் செளகரியத்திற்காக பிரசுரிக்கப் படுகிறது

லிவர் பிரதர்ஸ்

(இந்தியா) லிமிடெட்.

Com. 11-169 TM



எல்லாம் பாழ்

புனுவில் இருந்த பேஷ்வாக்களது பாழடைந்த அரண்மனையின் தோற்றம். 1827-ல் ஷன்வார்வாடா அரண்மனை தீக்கிரையாயிற்று. 1729-ம் வருஷம் ஜனவரி 10-ம் தேதி இதன் அஸ்திவாரத்தை நாட்டினுர் பாஜி ராவ் பேஷ்வா. ஏழு வருஷங்களுக்குப் பின் கட்டிடம் பூர்த்தி பெற்றது. 1818-வரை பேஷ்வாக்கள் இங்கு தான் வசித்தனர். 1790-ல் திப்பு சுல்தானுக்கு எதிராக கிழக்கிந்திய கம்பெனியாரும் பேஷ்வாக்களும் செய்து கொண்ட ஒப்பந்தம் இம்மாளிகையில் தான் கையெழுத்திடப்பட்டது.

முடையவர். நிஜாம் உல் மூல்க்கின் அந்தப்புரத்து ஸ்திரீகள் பாஜிராவின் அழகிய தோற்றத்தை, ஒருவருமறியாமல் பார்ப்பதற்கு அனுமதி கேட்டார்களென்றும் சொல்லப்படுகிறது. மொகலாய சக்ரவர்த்தியான மகமத் ஷாவும்,தன் ராஜ்யத்தை அடிக்கடி ஹிம்ஸித்து வந்த

மஸ்தானி பேகம்

பேஷ்வாக்கள் காலத்தில் மஹாராஷ்டிர ராஜ்யம் சிறப்பும் மேன்மையும் பெற்று, பக்கத்திலிருக்கும் நாடுகளை ஜயித்து அதிகாரத்தைச் செலுத்தி வந்தது. சத்ரபதி சிவாஜியின் ஹிந்து ஏகாதிபத்யக் கொள்கையையே அவர்கள் தங்கள் ஆதர்சமாகக் கொண்டு அதை நிறைவேற்றுவதிலேயே முனைந்திருந்தனர். அந்த லக்ஷியத்தில் அவர்கள் வெகு தூரம் வெற்றியடைந்தனர். ஹைதராபாதை ஆண்டு வந்த நிஜாம்—உல்—முல்கைப் பணிய வைத்ததுமன்றி, மொகலாய ராஜ்யத்தின் தலைநகரமாகிய டில்லிக்குள் பிரவேசித்து, மொகலாய சக்ரவர்த்தியை நடுங்க வைத்தனர். ஜயிக்கப்பட்ட பிரதேசங்களில் நல்ல ஆட்சி முறையை ஏற்படுத்தி, பீஷ்வாவின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவந்தனர். இந்த ஏற்பாட்டில், மஹாராஷ்டிர அரசரான ஷாஹூவின் அதிகாரம் குறைந்து, பேஷ்வாவின் செல்வாக்கும் கெளரமும் அதிகரித்தன.

அராஜகமும், குழப்பமும், உள்நாட்டுக் கலகமும் அதிகமாயிருந்த அக்காலத்தில், பேஷ்வாக்களைப் போல சதுர ராஜதந்திரிகள் கிடைத்தது மஹாராஷ்டிரத்தின் அதிர்ஷ்டமேயாகும். அவர்கள் தங்கள் ஸேனுபலத்தினுல் பகைவர்களை அடக்கி, மஹாராஷ்டிரர்களுடைய ஆட்சியைப் பலப்படுத்தினுர்கள். பாலாஜி விஸ்வநாதினுடைய ராஜ்யத்தை விஸ்தரிக்கும் கொள்கை, அவரை விடக் கெட்டிக்காரரான பாஜிராவினுல் கைக்கொள்ளப்பட்டது. புத்தி பலத்திலும், புஜ பலத்திலும் பாஜிராவ் பெயர் போனவர். இவரே முதல் மூன்று பீஷ்வாக்களுக்குள் சிறந்து விளங்குகிருர். மஹாராஷ்டிர வீரர்கள், இவரால் தலைமை வகிக்கப் பட்டவர்களாகி முஹத்தான வெற்றிகளை அடைந்தனர்.

உண்மைக் காதல்

★

ஸ்ரீமதி பத்மா ஸ்ரீநிவாஸன் எழுதியது

துணிச்சல் பேச்சு

பாலாஜி விஸ்வநாத் 1720-ம் ஆண்டில் இறந்ததால், இருபத்திரண்டு வயதுடைய பாஜிராவ் தன் தகப்பனுர் வகித்த பேஷ்வா பதவியைப் பெற்ருர். வயதில் சிறியவராயிருந்தாலும் ஆற்றலில் பெரியவர்: போர் வீரரைத் தலைமை வகித்து நடத்தவும் அடக்கியாளவும் திறமை வாய்ந்தவர். பாஜிராவ் சமயத்துக்குத் தக்கவாறு நடந்து கொண்டதால் மஹாராஜா ஷாஹூவினுடைய நன் மதிப்பைப் பெற்ருர். அவர், மஹாராஜா ஷாஹூவின் முன்பும், மற்ற மஹாராஷ்டிர பிரபுக்கள் முன்பும் செய்த துணிச்சலான ஒரு சொற்பொழிவினுல், தன் எதிரியான ஸ்ரீபதிராவ பிரதிநிதியின் கக்ஷியை அதிகாரத்தினின்றும் விலக்கினுர். பாஜிராவ் சொன்னதாவது: "நமக்கு மொகலாய மரத்தை வேரோடு பிடுங்கும் சமயம் வந்துவிட்டது. வேரைப் பிடுங்கிவிட்டால் பட்டுப் போன கிளைகள் தானுகவே விழுந்து விடும். என்னுடைய ஆலோசனையைக் கேளுங்கள். நான் ஆட்டக்கில் மஹாராஷ்டிர ராஜ்யத்தை நிலை நாட்டுகிறேன்" என்று கர்ஜித்தார். அதிலிருந்து அவர் இறப்பதற்குள் (1740) பாஜிராவின் தீரச் செயல்கள் அவருக்கு வெற்றி மேல் வெற்றியை அளித்தன. நிஜாம்-உல்-முல்கினுடைய உபாயங்களெல்லாம் சிதறிப் போயின. பாஜிராவின் சேனைகள் டில்லியில் புகுந்து, பீதியை விளைவித்தன. இதனுல் பேஷ்வாவின் விரோதிகள், அவருடைய பெருமையை உணர்ந்து அவருக்கு உட்பட்டு நடந்து வந்தார்கள்.

காதற் கதை

வசீகரமும் வீர்யமும்படைத்த பாஜிராவுக்கு மஸ்தானி என்றுபெயர் கொண்ட மாதினிடம் அதிகமாக அன்பு ஏற்பட்டது. பீஷ்வாவின் பதிவ்ரதையான மனைவி காசிபாய், தன் கணவனுக்கு மஸ்தானியின் பேரில் இருந்த மோகத்தை சகித்து வந்த போதிலும், அவருடைய உறவினர்களுக்கு, முக்கியமாக அவருடைய தம்பி சிம்ணுஜி அப்பாவுக்கு, அது மிகுந்த வெறுப்பை அளித்தது. சிம்ணுஜி அப்பா தன்னுல் இயன்றமட்டும் மஸ்தானியையும், பாஜி ராவையும், பிரிக்க அரும்பாடுபட்டார். ஆனல் சிம்ணுஜியாலும், மற்ற எவராலுமே, காதலர்களுடைய அன்பைக் கலைக்கமுடியவில்லை. அவர்கள் சிம்ணுஜியின் எச்சரிக்கையைச் சிறிதும் கவனியாமல், காதலுக்காக எதையும் தியாகம் செய்யத் தயாராயிருந்தார்கள். பாஜிராவ் வசீகரமான தோற்றமுடையவர்...

பாஜிராவை பார்ப்பதற்கு மிகவும் ஆவலாக இருந்தார். அதற்காக அவர் பாஜிராவின் படத்தை தருவித்துப் பார்த்துவிட்டு, ஆவேசத்தோடு "இவன் நிச்சயமாக ஒரு ராக்ஷஸன் தான்" என்று கத்தினுர்.

காதலியின் வரலாறு

மஸ்தானி புந்தேல் கண்டின் தலைவனுன ராஜா சத்ரஸாலுக்கும், ஒரு முஹமதிய ஸ்திரீக்கும் பிறந்தவள். சத்ரஸால், மொகலாய சேனைத் தளகர்த்தனை மஹமத் பங்கேஷினுல் பிடிபடும், தருவாயிலிருக்கும் பொழுது பாஜிராவிடம் பின் வருமாறு முறையிட்டுக் கொண்டார். "கஜேந்திரனுக்கு வந்த ஆபத்து வந்து விட்டது. புந்தேல் கண்டின் மஹிமைக்குப் பங்கம் விளைந்து விடும் போலிருக்கிறது. பாஜி ராவே! என்னைக் காப்பாற்று!" அந்த விஷ்ணுவைப் போல், பாஜி ராவும் சத்ரஸாலை எதிரியின் பிடியிலிருந்து தப்புவித்தார், இந்த உதவிக்காக, சத்ரஸால் பாஜிராவை ஸ்வீகாரம் செய்து கொண்டதோடல்லாமல், தன் பெண் மஸ்தானியையும் அவருக்குக் கொடுத்தார். அவளுக்கு எழிலுக்கேற்ற துணிவும் இருந்தது. மஸ்தானி பாஜிராவை அவருடைய எல்லாத் துணிகரமான பிரயத்னங்களிலும் நிழல்போல் விடாமல் பின் தொடர்ந்தாள். மணிக்கணக்காக பாஜிராவோடு ஒரு பக்கத்தில் உட்கார்ந்து குதிரை சவாரி செய்வாள். பாஜிராவ் மற்றவர்களிடம் எவ்வளவு கடுமையாக இருந்த போதிலும், மஸ்தானியிடம்

ஷன்வர்வாடா அரண்மனை வாசற்பக்கத்தின் தோற்றம்.

மாத்திரம் மிகவும் பிரியமாகவும் சாந்தமாகவும் இருந்தார். பேஷ்வா அவளை எல்லா முக்கியமான கொண்டாட்டங்களுக்கும் அழைத்துச் செல்வார். ஒருதரம் அவளை ஷாஹுவின் தர்பாரில் நடந்த கச்சேரிக்குக் கூட அழைத்துச் சென்றார். பாஜிராவினுடைய குல தெய்வமான கணபதியினுடைய உத்ஸவத்தின் போது மஸ்தானியின் நாட்டியமும் பாட்டும், அங்குச் சென்ற எல்லோர் மனதையும் கவர்ந்தன. அவர்களுடைய காதல் அவர்களுடைய வளர்ச்சியோடு வளர்ந்து வந்தது. மஸ்தானியின் மோஹத்தில் ஈடுபட்ட பாஜிராவ் தன் மனைவியான காசிபாயை அடியோடு மறந்து போனார். தம்பியான சிம்ணஜி, தாயான ராதாபாய், பிள்ளையான பாலாஜி பாஜி ராவ், முதலியவர்கள் எவ்வளவு தடுத்தும் பாஜிராவுக்கு மஸ்தானி மீதுள்ள அளவற்ற அன்பு எள்ளளவும் குறையாமல் பெருகி வந்தது. ஆகையால் அவர்கள் மஸ்தானியை பாஜிராவிடமிருந்து பிரித்துவிட உபாயம் தேடினார்கள்.

பிரிவின் கடுமை

மஸ்தானி பாஜிராவிடமிருந்து பலவந்தமாக அப்புறப்படுத்தப்பட்டு, பேஷ்வாவின் பெயர்பெற்ற "ஷன்வர் வாடா" என்கிற மாளிகையில் சிறைப்படுத்தப்பட்டாள். பாஜிராவ் மனம் நொந்தவராய், பாதஸ் என்னுமிடத்திற்குச் சென்று யுத்தத்தில் கலந்து தம் துயரத்தை மறக்க விரும்பினார். சிறை வாசமோ, அல்லது கடுங் காவலோ, பாஜிராவுடன் சேர்ந்திருக்க விரும்பிய மஸ்தானியின் தீவிரமான ஆவலைச் சிறிதளவும் குறைக்க வில்லை. அவள் சிறையினின்றும் தப்பி பாஜிராவிடம் சென்றாள். ஆனால் சொற்ப காலமே அவர்கள் சேர்ந்திருக்க முடிந்தது. மறுபடியும் அவள் க்ரூரமாக சிறைப்படுத்தப் பட்டாள். பாஜிராவ் பிரிவாற்றாமையின் கொடுமையால் துடித்தார். அவர் கோபாவேசத்துடன் நிஜாம் தமக்களிப்பதாகச் சொன்ன ஜாகீரைக் கைப்பற்றுவதற்காக அவர் மகன் நாஸர் ஜங்கின் மேல் படையெடுத்துச் சென்றார். ஜாகீரைக் கைப்பற்றிய பின் அதைப் பார்வையிடும் போது கடுமையான ஜுரத்தால் பேஷ்வா பீடிக்கப்பட்டார். நாற்பத்திரண்டு வயதில் தன் மனைவியும், மகள் ஜனார்தனபந்தும் அருகில் இருக்கும் போது, பாஜி ராவ் இறந்து போனார். ஹிருதயம் உடைந்து போன மஸ்தானி உடன் கட்டையேறும் பொருட்டு வந்தாள். தீரத்துடன் அவள் தன் காதலனின் சவத்துடன் தீயில் பிரவேசித்தாள். இந்த முஸ்லிம் ஸ்திரிக்கு பாஜிராவிடம் இருந்த காதல் அவ்வளவு சிறப்புடையதாயிருந்தது. அவள் தன் வாழ்நாளின் லக்ஷியத்தை நிறைவேற்றி அன்று கூடியிருந்த கணக்கற்ற ஜனங்கள் பிரமிக்கச் செய்தாள்

பாஜி ராவ் ஆசைப்பட்டது

பாஜிராவுக்கு மஸ்தானியிட "ஷாம் ஸர் பஹதூர்" என்றும் ஒரு மகன் இருந்தான் அவன் சிறு பையனாக இருக்கும்போதே சிறந்த யுத்த வீரனென்று புகழ் பெற்றான். பாஜிராவுக்கு அவனைப் பிராமண குலத்தில் சேர்க்க மிக்க ஆவல் இருந்தது. ஆனால் ஹிந்து மதத்தின் ஸ்தம்பங்களான புரோஹிதர்கள், பேஷ்வாவின் அதிகாரத்துக்கு அஞ்சிய போதிலும், மதவிஷயத்தில் விட்டுக் கொடுக்க மறுத்து விட்டனர். ஆகையால் தான் ஷாம் ஸர் பஹதூருக்கு பாஜிராவால் உபநயனம் செய்ய முடியாமல் போயிற்று. மஹாராஷ்டிர ஸைன்யத்தை அலங்கரித்த வீர சிகாமணிக்குள் ஷாம் ஸர் பஹதூர் நக்ஷத்திரம் போல் விளங்கினான். பானிபத்தில் நடந்த யுத்தத்தில் அவன் வீரஸ்வர்க்கமடைந்தான். அவனுடைய குமாரன் ஆலி பகதூர் மாள்வாவுக்குச் சென்றான்.

பாஜிராவுக்கு மஸ்தானிடமிருந்த காதலின் ஞாபகார்த்தமாக அவர் 'ஷண்வர் வாடா' அரண்மனையின் ஒரு பாகத்தை அவளுக்கென்று கட்டிவைத்தார். 'மஸ்தானிகேட்' என்று பெயர்பெற்ற அக்கட்டிடம் மிகவும் வசீகரமான ஞாபகார்த்தமாக விளங்குகிறது. 1828-ம் ஆண்டில் ஏற்பட்ட ஒரு தீவிபத்தினால் ஷன்வர்வாடா இப்பொழுது ஒரு பாழடைந்த கட்டிடமாக இருக்கிறது. ஆனால் அதனுடைய கல்வெட்டுகள் மட்டும் சிறிதும் அழியாமல் இருக்கின்றன. அந்த கட்டிடத்தில், தோகத் ஹால், நாட்டியக் கூடம், கண்ணாடிக் கூடம், திவான் கானா, நாரணராவ் கூடம், தந்தக்கூடம், கணேச திவான் கானா." என்று ஏழு கூடங்கள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது: 'மஸ்தானி கேட்' இன்னும் நம்முடைய மனதைக் கொள்ளைகொண்டு, பாஜிராவ், மஸ்தானி இவர்களுடைய சிறந்த காதலை நினைவூட்டிக்கொண்டிருக்கிறது.



ஷன்வர் வாடா அரண்மனையில் ராணிகள் ஸ்நானம் செய்வதற்காக அமைக்கப்பட்ட ஜலத் தொட்டி, ஜலம் வரவும் போகவும் குழாய்கள் இருப்பதை படத்தில் பார்க்கலாம். இது அரண்மனை மத்தியில் இருந்ததால் இங்கு புருஷர்கள் நடமாட்டம் தடைப் பட்டிருந்தது.

இலவசம்! இலவசம்!! இலவசம்!!!

படத்திலுள்ளதுபோன்ற அமைப்பு. உண்மை ரிவால்வரைப்போலிருப்பதுடன 15 அவு. எடை 7" நீளம். 6 ரவைகளை சேர்ந்தாற்போல சுடலாம். இதன் சப்தத்தால் அனைவரையும் விரட்டலாம். திருடர்கள் விரோதிகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள சிறந்தது. நெ. 7777, 30 ரவைகளுடன் ரூ. 4/8 நெ. 8888, 45 ரவைகளுடன் ரூ. 5/13 நெ. 1111 55 ரவைகளுடன் ரூ. 6/12 அதிகப்படி 1000 ரவைகள் ரூ. 3/-, பெல்ட்டு ன் கேஸ். ரூ. 1/8. பிஸ்டல ஆயில் அணா 6. இலவசம்: ஒரு அழகிய மியூட் கை கடியாரம், ஒரு தோலா "பாரிஸ் நியூ கோல்ட்" ஒவ்வொரு பிஸ்டலுடனும் இனாமாகக் கொடுக்கப்படும். இவை உண்மை தங்கத்தைப்போலிருப்பதுமட்டுமின்றி, கம்பிகளாகவும் இழுக்கலாம், பிளேட்டுகளாகவும் அடிக்கலாம், எல்லாவித நகைகளும் செய்யலாம். குறிப்பு:—அங்கீகரிக்கப் படாவிடில் பணம் வாபீஸ் என்ற உத்தரவாதத்தினகீழ் விற்கப்படுவன. 2 பிஸ்டல் வாங்குவோருக்கு 2 அழகிய மியூட் கை கடியாரமும் 2 தோலா "பாரிஸ் நியூ கோல்ட்"டும் கொடுக்கப்படும். தபால சார்ஜ் இலவசம்.

இந்தக் குறைந்த கட்டணங்கள் வாபீஸ் பெறுமுன எழுதுங்கள்.

AMERICAN PISTOL SUPPLIERS

(E. A. B.) (S.M.M.) Ravi Road, LAHORE

ஜோதிர்மண்டலம்

★

சித்ரபானுஷூ ஆடிமீ

★

விசாகம்

அர்சக் கூட்டம்

இம்மாதம் குறிப்பிட்டுள்ள நேரங்களில் வடகிழக்கே வெகு உயரமான இடத்தில் அம்சக் கூட்டம் காணப்படுகின்றது. இக்கூட்டம் (பால் வழி) ஆகாய கங்கையின் பிரவாகத்தில் அமைந்திருக்கிறது. அதற்கு வடக்கே, அசுரக் கூட்டமும், அரசன் கூட்டமும் காணப்படுகின்றன. லைரா கூட்டம் மேற்கேயும், ராஜாளியின் கூட்டம் கிழக்கேயும் அமைந்திருக்கின்றன. அரேபியர்களும், கிரேக்கர்களும், பண்டைக் கால முதல் இக்கூட்டத்தை கவனித்து வந்தார்கள். ரோம் தேசத்தவர்கள், இக்கூட்டத்தை யுத்தக் கடவுளாகிய "மார்ஸின்" (Mars) புதல்வனாகக் கருதுகின்றனர். அசில்லீஸ் எனும் வீரனுடன் சண்டையிட்ட நெப்டியூனின் புதல்வனாகவும் சிலர் எண்ணுகின்றனர். அசில்லீஸ், இந்த தெய்வப் புதல்வனை சுலபத்தில் வெல்ல முடியவில்லை, வீராவேசத்தில் இவனைக் கீழே தள்ளி மண்ணுடன் மண்ணாக அழுத்தி, இவன் கவசத்தை அசில்லீஸ் பிடுங்குகையில், இவன் ஒரு அம்சமாக மாறி ஆகாயத்தில் பறந்து சென்றுவிட்டதாகக் கொள்கை. அரேபியர்கள் இதை ஒரு பெட்டைக் கோழியென்றும், பறக்கும் ராஜாளி யென்றும் கருதுகின்றனர். மொத்தத்தில் இதன் நக்ஷத்திரங்கள் ஒரு அழகிய பெரிய பெருக்கல் குறியை (X) வெகு அழகாக சித்தரிப்பதைக் காணலாம்.

இதன் முக்கிய நக்ஷத்திரம் டெனெப். (Deneb) இது இப்பக்ஷியின் வால் பாகத்தில் அமைந்திருக்கிறது. வெண்மை நிறமானது. மிக ஒளி பொருந்திய முதல் தர நக்ஷத்திரங்களில் ஒன்று. இதனிடமிருந்து நமக்கு ஒளி வந்து சேர சுமார் 500 வருஷங்களுக்கு மேலாகிறதென்று கணக்கிட்டிருக்கின்றனர். நம் சூர்யனைப்போல் சுமார் 8000 மடங்கு அதிக உஷ்ணத்தைக் கக்குகிறது. இதன் இரண்டாவது முக்கிய நக்ஷத்திரம் அம்சத்தின் அலகில் அமைந்திருக்கிறது. இது ஒரு இரட்டை நக்ஷத்திரம். இவ்விரு நக்ஷத்திரங்களும் மிக அழகிய காக்ஷி. அவைகளின் நிற வித்தியாசம் கவனிக்கத் தகுந்தது. ஒன்று மங்கிய நீல நிறமானது மற்றொன்று ஆரஞ்சு வர்ணமுடையது. இந்த நக்ஷத்திரம் சுமார் 160 ஒளி-வருஷங்களுக்கப்பால் இருக்கிறது.

இக்கூட்டத்தில் ஒரு சிறு நக்ஷத்திரம் இருக்கிறது. அதற்கு அம்சம் 61, என்று பெயரிட்டிருக்கின்றனர். இது நமக்கு நெருங்கியுள்ள நக்ஷத்திரம். இதனிடமிருந்து நமக்கு ஒளி வந்து சேர சுமார் 10 வருடங்கள் தான் ஆகின்றன. இதுவும் ஒரு இரட்டை நக்ஷத்திரம்தான். நம் சூரியன் மட்டும் இந்த நக்ஷத்திரம் இருக்கும் இடத்திற்குப் போய்விடக் கூடுமானால் நம் பார்வைக்கு சூரியன் மிகவும் சிறிய மூன்றாம் தர நக்ஷத்திரமாகவே விளங்கும்.

க்ரஹங்களின் நிலை

புதன்:—சென்றமாதக் கடைசி வாரம் மிதுனத்திற்கு மாறிற்று இம்மாதம் 12-ந்தேதியன்று (27-7-42) மிதுனத்தை விட்டு கடகத்தை அடைகிறது. 23-ம் தேதியன்று (7-8-42) இது அழகிய சிம்மக் கூட்ட நக்ஷத்திரங்களை அடைகிறது. புதன் இம்மாத முதலில் சூரியனுக்கு முன்னமேயே உதயமாகி அஸ்தமிக்கிறது. 19-ம் தேதியன்று (3-8-42) புதன் சூரியனுடனேயே உதயமாகி மறைகிறது. அதற்குப் பிறகு சூரியனுக்குப் பிறகே இரவில் மறைகிறது. அடுத்த மாதத்தில் புதனை மேல் வானில் சூர்யன் மறைந்த பிறகு காணலாம். புதன் 3-ம் தேதியன்று குருவினருகில் காணப்படும். குருவின் உதவியால் புதனை விடியற்காலையில் அன்று கண்டு பிடிக்கலாம்.

சுக்கிரன்:—இம்மாதமும் சுக்கிரன் விடியற் காலையில் கீழ் வானில் காணப்படும் எல்லா நக்ஷத்திரங்களையும் விட அதிப் பிரகாசமாக விளங்கும். 7-ம் தேதி வரை (22-7-42) ரிஷபத்திலும், அதற்குப் பிறகு மாதக் கடைசி நாள் வரை மிதுனத்திலும் ஊர்ந்து வருகிறது. நாள் செல்லச் செல்ல, சுக்கிரனுக்கும் சூரியனுக்கும், உள்ள நமக்குத் தோன்றும் தூரம் குறைந்து கொண்டே வருகிறது. 18-ம் தேதியன்று சுக்கிரனும், குருவும ஒன்றாக அமைந்திருக்கும் காக்ஷி பார்க்கத் தகுந்தது.

குஜன்:— இம்மாதமெல்லாம் சிம்மக கூட்டத்திலேயே தங்கி வருகிறது. மேல்வானில் சூரிய அஸ்தமனத்திற்கு அப்புறம் அழகுடன் குஜன் விளங்கும்,

குரு:— இம்மாதமெல்லாம் மிதுனத்திலேயே கழிக்கிறது. சுக்கிரனுக்கு அடுத்தாற்போல் குருவே, விடியற் காலையில் கீழ் வானில் நம் மனதைக் கவரும்.

சனி:—இம்மாதமும ரிஷபத்தில் கழிக்கிறது. உரானஸும் நெபடியூனும், முறையே ரிஷபத்திலும் கன்னியிலும நகர்ந்து வருகின்றன.

ஜோதிஷத்தில் பிரியமுள்ளவர்கள் பொருட்டு இம்மாதத்திய ராசி சக்கரம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆடிமீ 1௳

		சுக்கிரன் சனி	புதன் குரு
கேது	2௳—மிதுன-சுக்கிரன் 6௳—சிமம-குஜன் 11௳—கடக-புதன் 25௳—சிம்ம-புதன் 27௳—கடக-சுக்கிரன்		சூரியன் குஜன்
			ராகு

இஸ்லாமிய நூல்கள்

மஹான் முகம்மது நபி	0 [illegible] 0
அபுபக்கர் ஸித்திக்	0 12 0
உமரெ பாரூக்	1 0 0

முஸ்லீம் வாசகம் 1-5 வகுப்புவரை கிடைக்கும்.

ஷாஜஹான் புக் டெப்போ, நாச்சியார் கோவில்.

வார்பட இரும்பு

தண்ணீர் வளர்ச்சிக்கும்

தொட்டிகள்







இந்தியாவில் தயாரிக்கப்படும் மூன்று வித தண்ணீர் தொட்டிகளைப் பட்த்தில் காணலாம். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சிறந்தவைகளுக்குச் சமமானவை.

"டைபூன்" "மான்சூன்", தொட்டிகளில் கொசு பூராது. ஜே.ஸி. எஸ். டபிள்யூ. விதிகளுக்கிணங்க தயாரிக்கப்பட்டவை.

"யானை" மார்க் தொட்டிகள் மலிவானதாயும், திறமையுள்ளதாயும் தேவையென விரும்புவோர்க் கென்றேப் பிரத்யேகமாகத் தயாரிக்கப் பட்டவை.

தி ஈஸ்டர்ன் லைட் காஸடிங் கம்பெனி லிமிடெட்

12, மிஷன்ரோ, கல்கத்தா.

சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள்:

ஸவு இந்தியன் எக்ஸ்போர்ட் கம்பெனி லிமிடெட்.

தபால் பெட்டி நெ. 37, மதராஸ்.

நீதிக் கதை

கடவுளும் மனிதனும்

★

எ. எஸ். பி. அய்யர்
ஐ. ஸி. எஸ்.

மனம் போன போக்கெல்லாம் போகலாமென்றும், அதனால் பாபங்கள் ஏற்படுகிறதென்றும் ஒரு மனிதன விளக்கிக் கூறிக் கொண்டிருந்தான். 'மனிதன் தவறு செய்வதைக் கடவுள் கண்டிப்பதில்லை. மனிதனுடைய வாழ்க்கை பாழடைந்து போனாலும் கடவுள் கவனிப்பதில்லை. பகுத்தறியும் சக்தியைக் கொடுத்திருப்பதனால் மனிதன் பாபச் செயல்களைச் செய்தாலும் கடவுள் மனிதனை ஒன்றும் செய்வதற்கில்லாமலிருக்கிறது' என்று அவர் அப்புவிடம் சொன்னார். 'மூன்று வயதான குழந்தை ஒன்று கிணற்றில் விழப் போவதை நீர் பார்த்துக்கொண்டிருக்கிறீர்களென்று எண்ணிக் கொள்ளுங்கள். கிணற்றில் விழாமல் நீர் அந்தக் குழந்தையைத் தடுப்பீர்களா மாட்டீர்களா? அதற்குப் பகுத்தறிவும்: தன திஷ்டம் போல செய்வதற்கு அதிகாரமும் இருக்கிறதென்று நினைத்து நீர் சும்மா இருப்பீரா?' என்று அப்பு அவரைக்கேட்டான். 'நான் உடனே சென்று அந்தக் குழந்தையைக் காப்பாற்றுவேன். ஏனெனில் அந்தக் குழந்தையின் மனது பக்குவமடையவில்லை! அதனால் அனுபவசாலியான மனிதன் அந்தக் குழந்தையைக் காப்பாற்றியே தீர வேண்டும்' என்றார் அந்த மனிதர். 'குழந்தையின் மனோநிலைக்கும் மனிதனுடைய மனோ நிலைக்குமுள்ள வித்தியாசத்தைக் காட்டிலும், மனிதனுடைய மனோபாவத்திற்கும் கடவுளின் மனோபாவத்திற்கும் வித்தியாசம் அதிகம் இருக்க வேண்டுமென்பதை நீர் ஒப்புக் கொள்கிறீரா?'' என்று அப்பு கேட்க, 'ஆம்' என்று அவர் பதிலளித்தார். 'அப்படியானால், எல்லாம் வல்ல இறைவன். எங்கும் நிறைந்திருக்கும் பரம பொருள், எல்லாம் தெரிந்திருக்கும் தெய்வம், ஏன் மனிதர்களைக் குற்றம் செய்யாமல் தடுக்கக் கூடாது? மனிதனுடைய வாழ்க்கை முறிந்து போவதற்கு காரணமான செய்கைகளையும், கொலைகளையும், களவுகளையும், பலவந்தமாகக் கற்பழித்தலையும் ஏன் கடவுள் தடுத்து மனிதனைக் காப்பாற்றக் கூடாது?' என்று அப்பு எடுத்துச் சொல்ல அவர் பதில் சொல்லாமல் சும்மா இருந்து விட்டார்.

"சிறைவாசஞ் செய்தவனல்ல"

உயர்தரக் கலாசாலையில் படித்து பட்டதாரியான பிறகு கூட அப்புவுக்கு வேலை கிடைக்கவில்லை, சிறைவாசம் செய்து திரும்பிய குற்றவாளிகளுக்கு உதவி செய்யும் சங்கத்திற்கு அப்பு சென்றான். குற்றவாளிகளுக்கே உபகாரம் செய்யும் சங்கத்தனர், கொலைக் குற்றம் செய்யாதவனாகிய தனக்கு அதிக சந்தோஷத்துடன் உதவி செய்வார்கள் என்று அப்பு நினைத்தான், அந்த சங்கத்தின் காரிய தரிசி ஒரு இளம் வாலிபனாயிருந்தான். "நீ எப்போது வெளியே வந்தாய்? உனக்கு என்னிடமிருந்து என்ன வேண்டும்?" என்று காரியதரிசி அப்புவைக் கேட்டான். 'என்னை எங்கிருந்து வெளியே வந்ததாகக் கேட்கிறீர்?' என்றான் அப்பு. 'சிறைச்சாலையிலிருந்து தான்' என்று காரியதரிசி சொன்னான். 'நான் சிறைச்சாலைக்குச் சென்றதே இல்லை. நான் ஒரு குற்றமும் செய்தறியாத யோக்கியன். நான் வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறேன். அதனால் உதவியை நாடி நான் இங்கு வந்திருக்கிறேன்' என்று அப்பு சிரித்துக்கொண்டே பதிலளித்தான். 'தங்களுக்கு உதவி செய்ய முடியாததைக் குறித்து நான் வருந்துகிறேன், சிறைச்சாலையிலிருந்து வெளியே வருபவர்களுக்குத்தான் நாங்கள் உதவிசெய்ய முடியும்' என்றான் காரியதரிசி. 'அடா தெய்வமே! உங்களிடமிருந்து உதவிபெற வேண்டுமானால் ஒருவன் முதலில் குற்றம்செய்து, சிக்ஷை பெற்று, சிறைவாசம் செய்தாக வேண்டும், இந்த முறையினால் சிறைவாசத்திலிருந்து திரும்பியவர்களை நல்லவர்களாகச் செய்வதற்குப் பதிலாக, நீங்கள் யோக்கியர்களை அயோக்கியர்களாகி விடும்படி செய்துவிடுவீர்கள் என்பதில் சந்தேகமில்லை' என்றான் அப்பு.

பதினோரு மணிக்கு

இப்பொழுது மணி பதினொன்று. காலை வேளைக்குப் பிறகுண்டான சோர்வைப் போக்க டீ அருந்தும் சமயம் இதுவே. புருஷர்களும் ஆபீஸுக்குப் போய், குழந்தைகளும் பள்ளிக் கூடம் சென்றபின், நீங்கள் தனியாயிருக்கும் சமயம் இதுவே. "இனிது இனிது ஏகாந்த மினிது" என்றார் ஒரு கவி, ஆனால் ஒரு கெட்டில் டீயும் பக்கத்திலிருக்க வேண்டும் இவ்வேகாந்தம் இனிமையாயிருக்க.

★

எங்கள் புதிய பிரசுரமாகிய "டீ அருந்துவதற்கான சமயங்கள்" என்ற சித்திரங்களுடன் கூடிய புத்தகத்தில், டீ அருந்துவதற்கான சில விசேஷ சமயங்களைப்பற்றி இங்கிலீஷில் சொல்லப் பட்டிருக்கிறது. இந்த விளம்பரத்தைக் கத்தரித்து, உங்கள் பெயர் விலாசத்துடன், கீழ்க்கண்ட விலாசத்தாருக்கு அனுப்பினால், அவர் இப்புத்தகத்தின் பிரதி ஒன்று இலவசமாக அனுப்புவார்: கமிஷனர் (இந்தியாவுக்கு), இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா.

இந்தியன் டீ

அருந்துங்கள்
புத்துயிரளிக்கும் உயரிய பானம்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டார் வெளியிட்டது

IK 157

3 காரணங்கள்

501

நாங்கள் 501 ஸ்பெஷல் உபயோகிப்பது ஏன்?



501 ஸ்பெஷல் அழுக்கு பூராவையும் க்ஷணத்தில் போக்குகிறது. துணிகளைத் தனி வெண்மையாக்குகிறது.

501 ஸ்பெஷலில் துணிகளுக்கு ஹானிகரமான வஸ்துவொன்றுமில்லை. அதன் அபரிமிதமான நுரை மெல்லிய ஆடைகளுக்கு ஒரு கெடுதியும் செய்யாது.

501 ஸ்பெஷல் க்ஷணப்பொழுதில் ஏராளமான நுரையளிப்பதால் வீட்டில் துணிமணிகள் வெளுப்பதை எளிதாக்குகிறது.

மிருதுக் கொழுப் பற்றது.

501 ஸ்பெஷலைத்தவிர 501 வாஷிங்ஸோப்பு ஒன்றும் உள்ளது. அதன் விலை இன்னும் குறைவு, நம் வீட்டில் எல்லா அவசியங்களுக்கும் தீருந்த ஸோப்பு. கியூபுகளாகவும், நீளக் கட்டிகளாகவும், வில்லைகளாகவும் சீவல்களாகவும் எல்லாப் பெரிய கடைகளிலும் கிடைக்கும், 501 ஸ்பெஷல் வில்லைகளாக பெட்டிகளில் பாக் செய்து விற்கப்படுகிறது.

டாம்கோ விற்பனை இலாகா :
1, வாரன் ரோட், பீமன்பேட், மைலாப்பூர், மதராஸ்.
தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட், டாடாபுரம் & பம்பாய்.

சித்திரமும் சிருங்காரமும்

'ஸன் டௌன்'

'ஸன் டௌன்' என்ற யுனைடட் ஆர்டிஸ்ட் கம்பெனியாரின் படம், வீரம், தைரியம், காதல் முதலிய அம்சங்கள் நிறைந்தது.

மேஜர் கூம்ப்ஸ் கீனியா கவர்னரின் காரியதரிசி, அவர் மணிகர்வுக்கு வந்து அங்குள்ள ஸ்தல அதிகாரியிடம் ஷென்ஸி ஜாதியாருடன் சண்டை போட்டு அவர்களை விரைவில் அடக்குமாறு உத்திரவிடுகிறார். அஸ்காரி ஜாதியினர் அவருக்கு உதவுகின்றனர். சண்டை பலமாக முற்றிப் போகிறது

இந்த நிலைமையில் பெரிய பணக்காரராயிருந்த ஒரு அராபி வர்த்தகரின் புத்ரி ஜியா அவ்விடம் திரும்புகிறாள் தனது பரிவாரத்துடன் இதே சமயம் ஜான், குய்பன்ஸ் என்ற உலோக சாஸ்திர நிபுணனும், ரஸாயன சாஸ்திரியான டுவியும் அங்கு வந்து சேருகின்றனர். இவர்கள் வருகையைக் கொண்டாட கூம்ப்ஸ் ஏற்பாடு பண்ணுகிறான். குதூஹலமாக அது நடக்கிறது. ஜியாவின் அதிசய ரூபத்தைப் பார்ப்பவர் மயங்கி விடுகின்றனர்.

திடீரென ஏற்பாடுகள் நின்று விடுகின்றன. வேலைக்காரர்கள் மாயமாக மறைகின்றனர். ஷென்ஸி ஜாதியார் கூம்ப்ஸைக் கொலைத் தீர்மானித்திருப்பதாகத் தாம் அறிந்ததாக டுவி வெளியிடுகிறான் அதிதிகள் இடத்தை விட்டு வெளிக்கிளம்புகின்றனர் உடனே சச்சரவு ஆரம்பமாகிறது. துப்பாக்கிப் பிரயோகமும் நடக்கிறது.

எதிரி ஆர்ப்பாட்டம் சற்று அடங்கியவுடன் கூம்ப்ஸ் நண்பர்களுடன் தன்னுடன் விரோதம் காட்டியவனைத் துரத்திப் போகிறான். ஒரு நதி மத்தியில் சுட்டவனைக் கண்டு பிடிக்கின்றனர். அது ஹமுத் என்பவன் என்று தெரிகிறது. ஹமுத் சுட்ட குண்டினால் ஜியா தாக்கப்படுகிறாள். குய்பன்ஸ் ஜியாவைப் பார்த்து. அவளுக்கு உதவச் செல்கிறான். அப்போது ஜியா பிரிட்டிஷ் ஆட்சியையும் மணிக்கா அதிகாரி க்ராபோர்டையும் தான் வெறுப்பதாயும் தெரிவிக்கிறாள். இதை ரகசியமாகக்கேட்ட பலீனி என்ற க்ராபோர்டின் வேலைக்காரனை குய்பன்ஸ் கொல்கிறான். பிறகு இருவரும் மணிக்காவை விட்டுப் போக நிச்சயிக்கின்றனர். மறுநாள் அங்கு எங்கு பார்த்தாலும் ஒரே பேச்சும் கலவரமும்!

குய்பன்ஸ், ஜியா ஆகியவர்களைப்பிடிக்க க்ராபோர்டும் டுவியும் விரைகின்றனர். ஷென்ஸி பிரதேசத்தில் 75 மைல்களுக்கப்பாலுள்ள ஒரு குகைக்கு நண்பர்கள் வந்து சேருகின்றனர். அங்கு அருகாமையிலிருந்த ஒரு தடாகத்தில் ஒரு சமுத்திர விமானம் இருப்பதைப் பார்த்து அங்கு நீந்திப்போய் அதன் மூலம் உதவியனுப்பும்படி நைரோபிக்கு ரேடியோச் செய்தி அனுப்புகிறான்.

பிறகு குய்பன்ஸ் க்ராபோர்டையும் பிடித்து ஜியாவுடன் குகையில் அடைத்து விடுகிறான். ஷென்ஸி ஜாதியாருக்குத் தன் மனிதர் மூலம் வெடி மருந்து முதலியவற்றை உதவிக்கு அனுப்புமபடி குய்பன்ஸ் நிர்ப்பந்திக்கிறான். ஆட்கள் அதற்கு சம்மதிக்கின்றனர்; ஆனால் சிறிது தூரம் சென்றதும் கூம்ப்ஸ் படையிடம் சரண் புகுந்து விடுகின்றனர்.

ஜியாவையும் க்ராபோர்டையும் ஒழித்துவிட குய்பன்ஸ் யோசித்துக்கொண்டிருக்கும் போது ரகசியவழியாக ஜியாவின் ஆட்கள் அவன் முன்வந்து சேருகின்றனர். அவர்கள் தங்களது அராபிய உடையை நீக்கி தாங்கள் ஐரோப்பிய வீரர் என்பதை அவனுக்குக் காட்டுகின்றனர். பிறகு இந்த யுத்த வீரர்களுக்கும் குய்பன்ஸுக்கும் சண்டை நடக்கிறது. இதில் மேஜர் கூம்ப்ஸுக்கும் அதிக காயம், ஆனால் அவர் துப்பாக்கியிலிருந்து வந்த வெடி குண்டு குய்பன்ஸை கொன்று வீழ்த்துகிறது.

இந்தப் படம் 18-ந் தேதி முதல் எல்பின்ஸ்டனில் காட்டப்படுகிறது.

சரும சுகத்திற்கு

ரெக்ஸோனா

இருவித பலனை அளிக்கும் அழகிய சோப்.

ரெக்ஸோனாவினால் கழுவப்படும் ஒவ்வொரு தடவையும் அதன் சுகந்த நுரை இருவித பலனை அளிக்கிறது. முதலில் சருமக் கோளாறுகளுக்குக் காரணமான அசுத்தம் விஷக்கிருமிகள் முதலியவற்றால் உண்டாகும் தொத்து வியாதிகள் வாராமல் சுத்தம் செய்கிறது.

பிறகு அதன் தைல சத்து சருமத்தை சுத்தமாகவும் மிருதுவாகவும் செய்து புத்துயிரளிக்கிறது. ரெக்ஸோனா சரும சுகத்தைக் காப்பாற்றுவதால் தேக சௌந்தர்யமும் காப்பாற்றப்படுகிறது. அதனால்தான் நீங்கள் ரெக்ஸோனாவை தவறாது உபயோகிக்கவேண்டும்.

ரெக்ஸோனாவிலுள்ள அபூர்வ பொருள் "காடில்" உங்களது பாதுகாப்பு. ஆரோக்யமளிக்கும் அபூர்வ வஸ்துவான 'காடில்' ரெக்ஸோனாவில் உள்ளது. இதற்கு கிருமி நாசன சக்தி சற்றே வாய்ந்துளது. மேனி அழகைக் கெடுக்கும் அசுத்தங்களை ஒழிக்கும்படி சருமத்தினுள்ளே செல்லவல்லது.

Rexona

சோப்பும் பசையும் மேனியின் அழகை அதிகமாக்கிக் காப்பாற்றுகிறது.

ரெக்ஸோனா பசை ஒவ்வொரு குடும்பத்திற்கும் அவசியமானது சொறி சிரங்கு காயம் படை ஆறாத ரணம் முதலியவற்றை ரெக்ஸோனா பசை சீக்கிரம் குணப்படுத்தும்.

REXONA PROPRIETARY LIMITED. RP 16—169 TM

எல்பின்ஸ்டன்
போன் : 3206

ஆச்சரியம் - பயங்கரம்
நிறைந்த இவ்வருஷத்திய
அற்புத படம்.

"SUN DOWN"

(ஸன்டௌன்).

ஜீன் டிர்னி, ப்ரூஸ் கபோ,
ஜார்ஜ் ஸாண்டர்ஸ்,
ஸர் ஸிட்ரிக் ஹார்ட்விக்
இன்னும் அநேகர் நடிப்பது.

வால்டர் வாங்கர்
தயாரிப்பு.

யுனைடெட் ஆர்டிஸ்ட்
படம்.

ஜூலை 18உ சனி முதல்
ஒரு வாரம்

தினசரி 3 காட்சிகள்

ஸ்ரீரங்கம் அட்வொகேட் ஸ்ரீ எஸ். கிருஷ்ணமாச்சாரியாரின் புத்திரி சௌ. அலமேலுவுக்கும், விருதுநகர் பர்மா ஷெல் ஏஜெண்டான ஸ்ரீ பி. எஸ். திருமலை அய்யங்காரின் புத்திரன் ஸ்ரீ பி. டி. ஸ்ரீனிவாசனுக்கும், இம்மாதம் 2-ம் தேதி விவாகம் நடைபெற்றது.

தமிழ் நூல்கள்

ஸரஸராஜன்	0	4
ப்ரேமப்ரபா	0	8
சுடர் விளக்கு	0	6
பக்ஷமாலிகா	0	6
மாதவமணி	0	4

சிறுவர் கதை

சமயோசித புத்தி

"குஞ்ஜா"

முன் காலத்தில் அயர்லாந்திலிருந்து பிரான்சுக்கு வெண்ணை ஏற்றுமதி பலமாக நடந்து வந்தது. வெண்ணெயைப் பிப்பாயிலடைத்து பாய்மரக் கப்பல்களிலேற்றி அனுப்புவார்கள். அங்காலத்தில் கடலில் கப்பல்களில் போவதென்றால் ரொம்ப பயம். எங்கு பார்த்தாலும் கப்பல் கொள்ளைக்காரர்கள் இருந்தனர். தன்னந்தனியாக ஏதாவது கப்பல் போய்க் கொண்டிருந்தால் அவர்களுக்கு நல்ல வேட்டை. உடனே அதைப் பிடித்து அதிலுள்ள சாமான்களையும் நாணயங்களையும் கொள்ளையடிப்பர். ஏதாவது திமிறினால் கப்பலைத் துளைத்து கடலில் அமிழ்த்திவிடுவார்கள். இதனால் எப்பொழுதும் பத்து அல்லது பதினைந்து கப்பல்கள் சேர்ந்தே போவது வழக்கம்.

ஒரு நாள் ஒரு கப்பல் அநேகம் வெண்ணெய்ப் பிப்பாய்களை யேற்றிக்கொண்டு பிரான்சுக்குப் போகத் தயாராயிருந்தது. துறைமுகத்தில் இதைத் தவிர வேறு ஒன்றிரண்டு கப்பல்களே தயாராக இருந்தன. அவைகளது காப்டன்கள் தகுந்த கூட்டம் சேரும் வரையில் புறப்படக் கூடாதென்று நிச்சயம் செய்து கொண்டனர். ஆனால், வெண்ணெய் சீக்கிரம் கெட்டுவிடக் கூடிய வஸ்துவானதால் தான் அதிகம் தாமதிக்கக் கூடாதென்று வெண்ணெய்க் கப்பலின் காப்டன் மாலுமிகளை கூப்பிட்டு கப்பலை நகர்த்தினான். மாலுமிகள் சற்று பயந்து, "அய்யா வழியில் கொள்ளைக் காரர்கள் வந்தாலென்ன செய்வது?" என்று கேட்டனர்.

"அதைப் பற்றி உங்களுக்கென்ன யோசனை? நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று தைரியம் கூறினான். காப்டன்

துறைமுகத்தை விட்டு கடலில் சுமார் நாலு மைல் போவதற்குள் கொள்ளைக்காரர்களின் கப்பல் மறித்துக் கொண்டது. கொள்ளைக்காரர்களும் அநேகம் பேர் இருந்தனர். மாலுமிகளுக்கு இன்னது செய்வதென்று தோன்றாமல் காப்டனை நோக்கிச் சென்றனர். அதற்குள் காப்டனும் கப்பலின் மேல் தளத்திற்கு வந்து சட்டென்று மாலுமிகளை தங்கள் கால் பூட்சுகளைக் கழற்றி விட்டு ஒரு பிப்பாய் வெண்ணெயைக் கொண்டு வரச் சொன்னான்.

அவர்களும் அப்படியே கொண்டு வந்து பிப்பாயை வைத்து விட்டு, வெண்ணெய்க்கும் கொள்ளைக்காரனுக்கும் என்ன சம்பந்தம் என்று விளங்காமல் அவனைக் கவனித்துக் கொண்டு நின்றனர்.

"கொண்டு வா, ஒரு உளியை," என்று கூவினான் காப்டன். உளியும் வந்தது. பிப்பாயின் மூடியும் உடைத்து எடுக்கப்பட்டது. ஒவ்வொருவருக்கும் கை நிறைய வெண்ணெயை வாரிக் கொடுத்து "கப்பலின் மேல் தளம், கயிறு எல்லா இடங்களிலும் வெண்ணெயை கனமாக பூசுங்கள். சீக்கிரம்! அவர்கள் வர இன்னும் கால் மணியாவது செல்லும்" என்று சொல்லிவிட்டு தானும் வெண்ணெயை கையிலெடுத்து கயிறுகளில் பூசினான். ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் ஒரு பிப்பாய் வெண்ணெயும் காலியாகி விட்டது. கப்பல் முழுவதும் வெண்ணெமயமாகி விட்டது. வெறுங்காலுடனே கூட அவர்களால் சரியாக நிற்க முடியவில்லை. வழுக்கு வழுக்கென்று வழுக்கித் தள்ளிற்று. கொள்ளைக்காரர்கள் நெருங்கியதும் எல்லோரும் போய் ஒளிந்துகொண்டனர்.

தம்மைக் கண்டு நடுங்கி ஒளிந்துவிட்டதாக கொள்ளைக்காரர் உத்சாகம் கொண்டு இரண்டு கப்பலையும் பிணைத்துவிட்டு நாலைந்து பேர் பூட்சு கால்களுடனும், உருவிய கத்தியுடனும் தொப்பு தொப்பென்று கப்பலுக்குள் குதித்தனர். உடனே எல்லாரும் வழுக்கி விழுந்தனர். எழுந்திருக்க முயன்றால் மேலும் வழுக்குகிறது. கயிற்றைப் பிடித்தால் அதுவும் வழுக்கித் தள்ளுகிறது. நாலு கொள்ளைக்காரர்களுக்கும் நல்ல அடி. முதலில் சென்றவர்களின் கதியைப் பார்த்துவிட்டு மற்றவர்கள் கப்பலுக்குள் குதிக்க யோசனை செய்துகொண்டு நின்றுவிட்டனர். பிறகு களைப்பு மேலிட்டு, தங்கள் கப்பலிலிருந்து இரண்டு கயிறுகளை வெண்ணெய்க் கப்பலுக்குள் விட்டெறியுமாறு கீழே விழுந்த கொள்ளைக்காரர்கள் கத்தினார்கள். அப்படியே இரண்டு கயிறுகளும் போடப்பட்டன. மெதுவாக அவற்றைக் கெட்டியாக இருவர் பிடித்துக் கொண்டனர். தங்கள் கப்பலிலிருந்து கொள்ளைக்காரர்களை அவர்கள் மெதுவாக இழுத்துத் தங்கள் கப்பலுக்குள் சேர்த்தனர். அதேமாதிரி மற்ற இருவரையும் வருவித்துக் கொண்டனர்.

கொள்ளைக்காரர்கள் மிகுந்த கோபமும் வெட்கமுமடைந்து வந்த திசையே சென்று விட்டனர். காப்டனின் சமயோசித தந்திரத்தினால் கப்பல் கொள்ளைக்காரர்களிடமிருந்து தப்பியது. வெண்ணெயும் பிரான்சுக்கு போய்ச் சேர்ந்தது.

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி.
வைத்தியசாலை,
பழனி. S. I.

பிரபல ஜோதிஷர்.

மஹா ராஜாக்களால தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு ஜாதகம் கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ.5. ஆருடம்3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர்மலை, குரோம்பேட்டு போஸ்டு. எஸ். ஐ. ஆர்.

பெப்ஸ் தவறாமல் உட்கொண்டு, தொண்டை சுவாசப்பைக்கு தொத்து கிருமிகள் வராமல் தடுத்துக்கொள்ளுங்கள்.

இருமல், ஜளிப்பு, குளிர், காசம், தொண்டை உபத்திரவத்தால் கஷ்டப்பட்டால், பெப்ஸ் கிருமிநாச சுவாச மாத்திரைகள், சீக்கிரமாகவும், நிச்சயமாகவும் குணமளிக்கும்.

பெப்ஸ் வாயில் கரைந்தவுடன் மருந்து பூர்வமான ஆவி, சுவாசத்துடன் கலந்து சுவாசப்பைக்குச் செல்லுகின்றது. பெப்ஸ் தொத்துக் கிருமிகளைத்தேடி ஒழித்துவிடுகின்றது. சுவாச குழாய் அடைப்பை நீக்கி, சளியை அறுத்து, கடுமையான ஜளிப்பையும் நீக்கிவிடும். பெப்ஸ் தொண்டைக்கு சமனூட்டும். சுவாசப்பைக்கு பாதுகாப்பளிக்கின்றது. எல்லாமருந்து வியாபாரிகளும் பெப்ஸ் ரூ. 1 வீதம் விற்கின்றனர். ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா அண்டு கம்பெனி, பி. டி., மதராஸ்.

எப்பொழுதும் பெபஸ் உட்கொள்ளுக.



PEPS

கிருமிநாச சுவாச மாத்திரைகள்